# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

6-11-66

விலை 20 காசு



# ஒரு பொழுதும் வாழ்வதறியார்!

க. அறிவழகன் எம். ஏ

முகப்புக் கதை.

சந்திரசேகரன் இரயிலில் தனக்கென ஓர் இருக்கையை முன் கூட்டியே சிரமப்பட்டு பதிவு செய்திருக்க வேண்டாமென எண்ணினான்; காரணம் அன்றைய தினம் ஆச்சரியப்படும் வகையில் தன்னுடைய இடத்திற்கு எதிரே மற்றொரு இருக்கை மாத்திரமே "ரிசர்வு செய்யப்பட்டிருந்தது. அந்த இருக்கையில் ஒரு தோல் பெட்டி முதலிலேயே வைக்கப்பட்டிருந்தது. அநேகமாக அப்பெட்டி அவ்வண்டியின் கதவுக்கு வெளியே ஓர் அழகிய பெண்ணோடு பேசிக் கொண்டிருக்கும் இளைஞனுடையதாகத்தான் இருக்கவேண்டும். அந்த இளைஞன் அணிந்திருக்கும் பட்டு நிறச்சட்டை காற்றில் சல சலப்பது போல் அவன் உள்ளம் பட படக்கிறதோ?

சன்னல் வழியே அவனது முதுகுப்புறம் தெரிகிறது. முகம் மட்டும் சிறிதும் தெரியவில்லை. கற்சிலைபோல் நிற்கும் காளையவனிடம் பொற்சிலையாம் பாவையவள், அமுதூறித்திளைத்திட்ட செவ்விதழ்கள் சிவக்க, கன்னக்கதுப்புகள் வெதும்பி இளைத்திட வேகமாகப் பேசுகிறாள்; அன்றி ஆர்வம் பொங்க சொற்களைக் கொட்டி விழிகளால் அவனை விழுங்குகின்றாளோ?

ஒன்று நன்கு புரிகின்றது: அவள் கேள்விகட்கு அவன் பதில் பேச மறுக்கிறான்! ஒருநேரம் பதில் கூறி அலட்சியச் சிரிப்பு சிரிக்கின்றான்.

எழுச்சியும் வீழ்ச்சியும் அவள் முகத்திலும் அகத்திலும் தேங்குவதும் பொங்குவதும் அடங்குவதுமாய் இருக்கின்றது. அழகுக்கே இலக்கணம் கூறி நிற்கும் அப்பாவையிடம் அலட்சியப் போக்குக் காட்டிடும் அவ்வாலிபனை சந்திரசேகரன் வெறுத்தான்; சினந்தான்.

ஆனால் அவ்விளைஞனோ அப்பாவையின் கெஞ்சும் விழிதனைக் காணமல், கொஞ்சும் மொழிதனைக் கேளாமல் இப்புறகை சலமத்திட்ட பாறுங்கல்லினும் கடுமையாக ஆடாமல் அசையாமல் பின்புறம் கட்டிய கைகளை முறுக்கிட்டு உடலினை விறைத்து நிறுத்தி நின்றிருந்தான்.

சந்திரசேகரன் எண்ணினான்!... அவள் அவனைக் காதலிக்கிறாள் போலும். பெண்ணுள்ளத்தை ஆட்கொண்ட பேற்றினை எண்ணி எண்ணி பெருமிதப் படவேண்டிய பேராண்மை, உணர்ச்சியற்ற மரமாகி நிற்கின்றதே! கரிப்புகையினை கக்கிடும் நீராவி இயந்திரத்தோடு கோர்க்கப்பட்ட வண்டி, இயந்திரம் இழுத்த இழுப்பில் இழுபடுவது போல், களவும் கற்பும் காரிகையை காதலன்முன் வாதிடவைத்ததோ?

இடத்தைவிட்டு எழுந்து கருத்து ஒரு மித்திடா காதலா முனமேனே சென்று என்னதான் இப்பேச்சு என்று கேட்டிட எவருக்கும் தோன்றிடும். இளமை தொட்டு சில பழக்கங்களில் ஊறிவிட்ட மனம், சந்திரசேகரனைத் தடுத்தது; உள்ளத்து எழுந்த உணர்ச்சி வேகம்தனை அறிவு சிரமப்பட்டு அடக்கி ஆயாசப் பெருமூச்சு விட்டது; சினிமா பார்க்கும் ஒருவன் காட்டப்படும் நிகழ்ச்சிகள் கருத்திற்கு ஒத்துவரா நிகழ்ச்சியெனினும், ஊமையென உட்கார்ந்து பார்த்திடுவதுபோல், நிகழ்ச்சிகளைக் கண்டுகொண்டிருந்தான்.

"இரயில் புறப்படும் நேரமாயிற்று, 'விசில்' சத்தம் நீண்டு ஒலித்தது. காதலனை மனமில்லாமல் பிரிந்து செல்லும் காதலியைப் போல் அந்த ரயிலும் மெல்ல நகரத் தொடங்கியது. பருவ மழைபோல் கண்சோர நீர் உகுத்து நின்றிட்டாள், பாலும் கசந்துவிடும் பருவ மங்கை, வெண்ணிறப் பாலாடையன்ன அவள் உடையும், அதனுடன் போட்டியிடும் அவள் ஒளி மிகுந்த விழிகளும், வாலிபனின் உறுதியை உடைத்திட, நகரத் தொடங்கிய இரயிலில் அந்த இளைஞன் தாவி ஏறினான். ஆவி சோர்ந்திட பேதையவள், பின்னே தொடர்ந்து ஓடிவந்தாள். 'குமார்' 'குமார்' என கெஞ்சும் குரலினை உயர்த்தி, செவ்விதழ் சிவக்க அழைத்திட்ட மங்கை நல்லாள், இரயிலின் வேகம் தன்னை மிஞ்சிவிட்டது உணர்ந்து நின்றிருக்க வேண்டும்.

இளைஞன் குமாரின் முகத்திலோ அகத்திலோ எந்த மாற்றத்தையும் கண்டிடாத சந்திரசேகரன், இரக்கமிலா அரக்க மனங்கொண்ட கல்நெஞ்சன் இவன் என எழுந்துகூற எண்ணினான். அப்போது இரயிலில் எரிந்திட்ட விளக்கின் ஒளி குமாரின் முகத்தின் மீது தெறித்தது. எண்ணெயில்பட்ட வைரக்கற்கள் போல் அவன் முகம் ஒளியிழந்து காணப்பட்டது. இழந்ததை எண்ணியோ அல்லது இழக்கப்போவதை எண்ணியோ அவன் வருந்துகிறான்போலும் அனுதாபத்திற்குரிய இவ்விளைஞன், பரிதாபத்திற்குரிய அப்பாவை—இவ்விரண்டு உள்ளங்கட்கு இடையே ஏற்பட்டுள்ள பூசல் நீக்கப்பட வேண்டுமென சந்திரசேகரன் எண்ணினான்.

நாக்கும் உதடுகளும் ஒருசேர ஒட்டிக்கொள்ளும் நேரம் எதுவென்று அன்றுதான் சந்திரசேகரன் உணர்ந்தான்; அவன் நா எழவில்லை. எத்தனை மைல்கள் ரயில் கடந்தது, எத்தனை இடங்களில் நின்றது என்பது நினைவிலில்லை.

இரவின் நிம்மதியைக் குலைத்து, பயணிகளை அமைதியுடன் இருக்க விடாது ஓயாது குலுங்கி குலுங்கி சென்று கொண்டிருந்த இரயில் திடீரென்று நின்றது நடுநிசியில் ஏகாந்தமான ஓரிடத்தில் இரயில் நின்றதின் காரணம் அறியும் பொருட்டும் பயணிகள், நெருப்பினைத் தொட்டு குட்டினைப் பிரித்துகொள்ளும் குழந்தைகள் போல, இறங்கி இங்கும் அங்குமாக அலைந்தனர்.

"இரயிலில் அடிபட்டு ஒருத்தி குற்றுயிராகக் கிடக்கின்றாள்!" என்றான் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்த ஒருவன்.

இச்செய்தி கேட்டவுடன், தேள் கொட்டி இடத்தை விட்டு எழுந்தவன்போல் வேகமாக எழுந்து

(11-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 3 6-11-66 இதழ் 15


# கல்பாக்கமும் இல்லையா?

கொதிக்கும் கும்பிக்குக் கூழையேனும் குடித்துக் கொதிப்படக்கிக்கொள்வோம் எனக் கருதும் ஒருவனது கூழ்ச்சட்டியையும் தட்டிப்பறித்துக் கொண்டால் எப்படியோ, அப்படிப்பட்ட கொடுமைக்குத் தமிழகம் ஆளாக்கப்பட்டுவிட்டது.

காங்கிரஸ் கனவான்கள் நாடாளவந்த காலமுதல், தமிழ்நாடு எப்படியெப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கின்ற நல்லோர்தம் குருதிக் கொதிப்பேறி, அந்தக் கொடுங்கோலர்களைத் தீய்த்துக் கருக்காதா? என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

குரூரமிக்க அரக்கத் தனத்திற்குக்கூட ஒரு எல்லை இருக்கக்கூடும் என்று எண்ண இடம் தரும் இதயம், காங்கிரசின் கொடுங்கோன்மைக்கு எல்லையே இருக்காது என்ற திட்டவட்டமான தீர்ப்புக்கே வந்துவிடச் செய்கிறது.

> கல்பாக்கம் அனல் மின்சார நிலையத்துக்காகப் பொருளாதார உதவி செய்வதாக ஒப்புக்கொண்டிருந்த பிரஞ்சு நிறுவனம், தன்னாட்டு தொழில் நுட்ப வல்லுநர்களையே அத்திட்டத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று கோரியது. —இது செய்தி.

ஒரு நாட்டின் தொழில் வளத்தைப் பொறுத்துத்தான், அந்நாட்டின் மக்கள் வளம் இருக்குமென்பது, நாட்டிலக்கணம் என்று அறிவாளர் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள பொது உண்மை.

தமிழ்நாட்டுத் தொழில் வளத்தின் சிறப்பியல்புகள் — மின்சாரத் தட்டுப்பாட்டுக்கும். கட்டுப்பாட்டுக்கும் ஆட்பட்டு, அவலக்குரலெழுப்பி, அலுவலரை, பணிநேரம் முடியுமுன்பே மனைநோக்கி விரட்டுகிற அளவுக்கு முன்னேற்றம்!

கடந்த பல ஆண்டுகளாகவே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், மின்சாரக் கட்டுப்பாட்டுக்குப் பல தொழிலகங்களும் பலியாகி முடங்கிய சோகத் தொடர்கதை. படைத்துக்கொண்டுள்ளது.

தொழில்துறை அமைச்சர் கனம் ஆர். வெங்கட்ராமன் அவர்கள், அண்மையில் தமிழகமெங்கணும் பெய்த பரவலான மழைக்குப் பின்னர், ஆங்கில நாளேடு ஒன்று, கேலிச்சித்திரம் தீட்டித் தெளிவுபடுத்துகிற அளவுக்கு, அடுத்த ஆண்டு மின்சாரவெட்டு இருக்காது' என்று கூறி இருக்கிறார். அடுத்த ஆண்டு என்ற சொற்றொடர் மூலம், இதுவரை 'வெட்டு' இருந்ததையும், இனி மழை பொய்த்தால், 'மின்சார வெட்டு இருக்கும்' என்பதையும் ஒப்புக்கொள்கிறார்.

இதன்மூலம், தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறதென்றும், இதனால் தொழில்துறை பாதிக்கப்பட்டு, அதனால் மக்கள்—உழைக்கும் வர்க்கம் — பாதிக்கப்பட்டு, அவதிக்கு ஆளாகி இருக்கிறதென்பதும் தெள்ளத் தெளிவாகிறது.

தொழில் நிலையில், தமிழகம் பின்தங்கியுள்ள நிலைமையை தொழிலமைச்சர் நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்; ஆனாலும் 'இந்த துறையில் தமிழகம் முற்போக்கடைந்திருக்கிறது'—என்றும் கூறுகிறார் அவர்.

இப்படிக் கூறவேண்டிய நிர்ப்பந்த நிலையில் கனம் அமைச்சர் இருக்கிறார் என்பது நமக்குப் புரிகிறது. என்றாலும், நிர்ப்பந்தங்களும், கருத்துக்களைச் சுயமாகச் சொல்லவும், சிந்திக்கவும் கட்டுப்பாடு இருக்கக் கூடாது என்றும் துணிவாக எடுத்துக்காட்டும் பெருமனம் சில வேளைகளிலாவது இயங்குகிறது அவரிடம் என்பதால், இந்த உண்மையையும் அவர் எடுத்துக் காட்டுவார் என்று நம்புகிறோம்.

அப்படி அவர் ஒப்புக்கொள்ளும்போது, தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றாக் குறை நிலவுகிறது என்பதாலேயே, மைசூர் மாநிலத்திடமிருந்து அதிக விலைக்கு—மின்சாரம் பெற்று, தொழிலகங்களைக் கொஞ்சமாவது இயங்கச் செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதனையும் அவர் ஒப்புக்கொள்ள முடியும்.

இதன் மூலம், தொழில் துறையில் வளமில்லை என்பதனையும், ஆகவே தொழிலாளர் பெருமக்களது வாழ்வும் வளப்படவில்லை யென்பதும் பெறமுடியும்.

இந்நிலையில், தொழில் வளம் இல்லாத நிலையில்—வாழ்க்கை வளம் இல்லாது தமிழகம் இருக்கிறதென்பதை உணர்கின்ற நிலையில்,—

> "பேச்சு வார்த்தை முறிவு பெற்றதால், கல்பாக்கம் அனல் மின்சாரத் திட்டத்துக்குப் பயன்படுத்தவிருந்த மூலதனத்தை. வடக்கே—வங்காளத்தில், ஆல்டியாவில் எண்ணெய்ச் சுத்திகரிப்புத் திட்டத்துக்கும், உர உற்பத்திச் சாலைத் திட்டத்துக்கும் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.

— என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய செய்தி உணர்த்துகின்ற உண்மை என்ன?

பிரஞ்சு நிறுவனம், மூலதன உதவி செய்வதாக அறிவித்திருந்தது. இதனை வைத்துக் கொண்டே, அமைச்சர் அளகேசன் இத்திட்டம் பற்றி வானளாவப் பேசிப் பேசி மகிழ்ந்து 'பாரீர்! பாரீர்! தமிழகத்தைப் பாரீர்!' அதன் வளத்தைப் பாரீர்!! என்றெல்லாம் ஊரூருக்கும் சென்று சேதி சொல்லிவந்தார்.

இதே நேரத்தில் இந்திய அரசு, இத்திட்டத்துக்காக கனடா நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்திருந்தது.

இந்த வேலைகளின் இடையே செங்கை மாவட்டத்திலுள்ள கல்பாக்கத்தில், இத்திட்டத்துக்காக நில அளவு ஆர்ஜிதம் செய்யப்பட்டு, துவக்க வேலைகளும் பெரும்பான்மையும் முற்றுப் பெற்றுள்ளன.

தொழில் வல்லுநர்களை, ஏற்றுக்கொள்ளும் பேச்சு வார்த்தை முறிந்ததால். பிரஞ்சு நிறுவனம், வாக்களித்த உதவியை நிறுத்திக் கொள்ளவில்லை.

அவ்வுதவியை வங்காலத்து எண்ணெய் ஆலைக்கும் உர ஆலைக்கும் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பெற்றுவிட்டன என்று செய்தியும் வெளியாகிவிட்டது.

பேச்சு வார்த்தை முறிந்து விட்டதாக செய்தி வந்த வேகத்தில், அவ்வுதவித் தொகை வேறு திட்டத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளப்பட பிரெஞ்சு நாடு ஒப்புக்கொண்டது எப்படியென்றும் விளக்கப்படவில்லை.

ஏற்பாடுகள் செய்யப்பெற்றுவிட்டன என்று வந்திருக்கின்ற செய்தியில், எத்தனை வேகமும் அவசரமும் கைகொள்ளப் பெற்றுள்ளது என்பதுமட்டும் நன்கு தெளிவாகிறது.

கல்பாக்கம் அனல் மின்சாரத் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படவிருந்த தொழில் வல்லுநர்கள் பிரஞ்சு நாட்டினரா, கனடா நாட்டினரா என்பதில்—தமிழ் நாட்டுக்கு அக்கறையில்லை. அத்திட்டம் தமிழ் நாட்டுக்குத் தேவை, அவசரத் தேவை என்பதுடன், அதுவே போதாது—தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டமும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, செயலாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் கொண்டுள்ளது தமிழ் நாடு. இது குறித்து அண்மையில் நடைபெற்ற தூத்துக்குடி கழக மாநாட்டிலும் தனியானதொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மழை பெய்ததால் மட்டுமே, 'மின்சார வெட்டு இருக்காது' என்று அறிவித்துப் பூரிக்கும் தொழிலமைச்சர், இவ்விரு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால், மழை பெய்யாவிட்டாலும் (வெட்டு) இருக்காது என்று கூறி மகிழ முடியும்!

தூத்துக்குடி மின்திட்டத்தை, குரலெழுப்பப்பட்ட போதிலேயே, கை கழுவி விட்டுவிட்ட மத்திய அரசு, கல்பாக்கம் திட்டத்தையும் 'பேச்சு வார்த்தை முறிவு என்ற காரணத்தால் கை கழுவிவிட்டது' என்பதை உணர்த்தும் வகையில்தான், உதவித் தொகையை வேறொரு திட்டத்துக்கு ஒப்புக்கொண்டுவிட்டது என்ற செய்தியாகும்.

ஆயிரத்து எண்ணூறுக்கும்சற்றுஅதிகமாகவிருந்த மின் வழங்கு நிலையங்கள் பதினேழாயிரமாகப் பெருகியுள்ளன வென்றும், முதல் திட்டத் தொடக்கத்தில் 156 மெகாவாட்டாகவிருந்த மின் சக்தி 3ம் திட்ட இறுதியில் 1540 மெகாவாட்டாக உயர்ந்திருக்கிறதென்றும் புள்ளிவிவரம் போட்டுக் காட்டியும், மழை தவறினால் மின் வெட்டு நீடிக்கும்' என்று அமைச்சர் அறிவிக்கும் நிலைமைதான் இன்னமும் நீடிக்கிறது என்றால் தமிழகத்தில் பல தொழிலகங்களும், தொழில்களும் முடங்கியுள்ளன வென்பதை தொழிலமைச்சர் மறுக்கமாட்டார் என்று நம்புகிறோம்.

இத்தகைய நிலையிலிருக்கும் தமிழ் நாட்டில், ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஓரிரு திட்டங்களும் கூட கைவிடப் படுவானேன்?

**தமிழகத்தின் வளர்ச்சி, அனைத்திந்திய வணிகக் களத்தை வாட்டும் என்ற அச்சமா?**

**அல்லவென்றால், அவ்வுதவித் தொகையை அத்துணை அவசரமாக வேறு திட்டத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள முடிவெடுப்பானேன்?**

ஒருமுறை நடாத்தப் பெறும் பேச்சு வார்த்தை முறிவு பெற்று விட்டதனாலேயே எல்லாம் முடிந்து விட்டது என்பது பொருளா? மறுமுறை பேசிப் பார்த்து, முடிவுக்கு வரமுடியாதா? புதிய தெளிவுடனும், விளக்கங்களுடனும் அணுகிப்பார்க்க இயலாதா?

**பிரஞ்சு நாட்டு வல்லுநர்களைவிட, கனடா நாட்டு வல்லுநர்கள் எல்வகையில் சிறந்தவர்கள் என்பதையோ, பிரஞ்சு வல்லுநர்களையே ஒப்புக்கொள்வதால் விளையும் விளைவுகளையோ ஏன் எடுத்துக் காட்டவில்லை.**

தெளிவாகத் தெரிவது—தமிழகத்தின் தெள்ளிய வாழ்வை, டில்லிப் பேரரசு விரும்பவில்லை என்பது தான்!

சேலம் உருக்காலைக்காக—4-ம் திட்டத்தில் அதற்கான செயல் முறை இல்லையென்பதற்காக—அத்திட்டத்திலேயே தமிழ் நாட்டுக்கென எந்த விடிவும் இல்லையென்பதற்காகக் கொதித்துக் கிடக்கும் தமிழ் மக்களை, கல்பாக்கம் அனல் மின்சாரத் திட்டமும் கைவிடப்படுகிறது—என்று சொல்லாமல் சொல்லும் இச்செய்தி—ஆத்திரப்படச் செய்யவே தூண்டும்—மத்திய அரசு விரும்புகிற உணர்ச்சி பூர்வ ஒருமைப்பாட்டுக்கு ஊறு உண்டாக்கக்கூடும் என்பதை, தமிழக அரசினர் அறியமாட்டார்களா என்ன?

உருக்காலை உறுதியிலும் உறுதி—என்று உத்திரவாதமளித்து—வெற்றுப் பேச்சு பேசிவருவோர், இது குறித்து என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

டில்லிப் பேரரசு, திட்டமிட்டுச் செயல்படுகிறது—தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை அகற்றியாக வேண்டும் என்று டில்லியே விரும்புகிறது—அதற்கான சான்றுகள்தான் இத்தகைய நடைமுறைகள்—என்று மக்கள் சார்பில் குற்றம் சாட்டப்படுகிறதென்றால், காங்கிரஸ் அமைச்சர்கள் எந்த முகத்தை வைத்துக்கொண்டு மறுப்பார்கள்?

சேலம்உருக்காலைத்திட்டத்துக்கே,அதுஇல்லையோ யென்றானவுடன், எந்த முகத்தோடு வாக்குக் கேட்பது என்ற திண்டாட்டத்திலிருக்கும் தமிழகஅரசினருக்கு, கல்பாக்கம் விஷயம் ஒரு பேரிடியாகவே இருக்கும். என்றாலும், இதுவரை போலவே, வெறும் வாக்குறுதிகளாலும், இப்படியான நிலைமைகளை எடுத்துக் காட்டி இடித்துக் கூறும் எதிர்க் கட்சிகளை, இழித்தும் பழித்தும், பழி சுமத்தியும் பேசிப் பேசி, மக்களை ஏமாற்றி விடலாம் என்ற துணிவும் ஒருபுறமிருக்கும்.

இத்தகைய துணிவுகளாலும், காமராசர் சேமித்துக் கொண்டிருக்கிற கோடிக்கணக்கான கரன்சிக் கட்டுகளாலும், இனி மக்களை ஏமாற்றிவிட முடியும் என்று நம்புவது தெளிவான அறிவுத் தெளிவின்மையேயாகும்.

தமிழகத்தை இனியும் தொழில்—திண்டாட்டத்துக்கு ஆளாக்கி, அதனைக் கண்டு 'ஆடுவமே! பள்ளுப் பாடுவமே!' என்று ஆனந்த நடமிட காங்கிரஸ் நினைக்குமானால்—அது தன்னைத் தானே அழித்துக்கொள்ளும் இரங்கத்தக்க நிலைமைக்குத்தான் இழுத்துச் செல்லும் என்று எச்சரித்து, கல்பாக்கம் திட்டத்திற்கும், தூத்துக்குடி மின் திட்டத்திற்கும், சேலம் உருக்காலைக்கும், தமிழக அரசு டில்லிப் பேரரசைத் தட்டிக் கேட்கும் துணிவு பெற்றாக வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன்,—

தொலைபேசி மூலமே டில்லிப் பேரரசை 'உருக்காலை வேண்டும்'—என்று ஆந்திர அரசு கேட்க முனைகின்ற அளவுக்குத் துணிவு பெற முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் நேர்முகமாகவாவது சென்று நாட்டின் தேவையை நிறைவேற்றும் திட்டத்தைச் செயலாக்கும் பணியைத் தொடங்கிவிட்டு—

**கல்பாக்கம் கிடைத்துவிட்டது!**

**தூத்துக்குடி வந்துவிட்டது!**

**சேலம் ஏற்பட்டுவிட்டது!**

—எனப் பள்ளுப் பாடிக்கொண்டே மக்களைச் சந்திக்க வரவேண்டும், வாக்குக் கேட்க என்று கேட்டுக்கொள்கிறோம்.

✱

# தம்பி

## சிங்கத்தை அடக்கினேன்!

இப்படி ஒரு உரையாடல் உன் செவியில் விழுந்தால் என்ன எண்ணிக் கொள்வாய்?

ஒருகுரல்:- நான் சிங்கத்தின் மீது சவாரி செய்தேன்.
மற்ேறார் குரல்:- நான் யானைமீது உட்கார்ந்தேன்.
வேறோர் குரல்:- ஜோரான குதிரைமீது நான் உட்கார்ந்துகொண்டேன்.
இன்னோர் குரல்:- நான் அன்னப்பட்சி மீது உட்கார்ந்திருந்தேன்.
மற்றோர் குரல்:- அழகான மயில்மீது நான் உட்கார்ந்துகொண்டேன்.


இவ்விதமாகக்கூட ஒரு உரையாடல் நடைபெற்றிருக்க முடியுமா? கற்பனை இருக்க வேண்டியதுதான், ஆனால் இப்படியா சிங்கத்தின் மீது அமர்ந்தேன், யானை மீது அமர்ந்தேன — என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் நிலைமை எங்கே இருக்க முடியும்? —என்று கேட்கத் தோன்றும்.

இப்படி ஒரு உரையாடல், நடைபெற்றிருக்கவே முடியாது என்று அடித்துப் பேசிவிடாதே தம்பி! நன்றாக யோசித்துப் பார்த்துச் சொல்லு, இவ்விதமான பேச்சு உன் காதில் விழுந்தால், என்ன எண்ணிக்கொள்வாய்? யார் இப்படிப் பேசியிருக்க முடியும்? எந்த இடத்தில் இவ்விதமான பேச்சு இருந்திருக்க முடியும்? விளங்கவில்லையா? சரி! நானே கவனப்படுத்துகிறேன்.

திருவிழா, பேரூரில். உள்ளூர் வெளியூர் கூட்டம் நிரம்ப. மகிழ்ச்சி. ஆரவாரம்! கடைகள், அலங்காரமாக! களியாட்டம்! கரக ஆட்டம்! மயிலாட்டம் ஒயிலாட்டம்! சிறுவர் சிறுமியர் ஓடிஆடி விளையாடுகிறார்கள்! ஓங்கு ஒரு பக்கத்தில் குடைராட்டினம்—(சில இடங்களில் ரங்கராட்டினம் என்பார்கள்) அமைத்திருக்கிறான் ஒருவன், சிறார்களுக்காக! குடைராட்டினம் தெரியுமல்லவா! சிங்கம், புலி, யானை, குதிரை, அன்னம், மயில், மாடு, ஆடு, கட்டில், தொட்டில், சோபா, இப்படி மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட பொம்மைகள் தொங்கவிடப்பட்டிருக்கும்; காசு கொடுத்து விட்டு அவரவர் தத்தமக்கு விருப்பமானதன் மீது உட்கார்ந்து கொள்ளலாம்; கீழே நின்ற படி, குடைராட்டினக்காரன், அவைகள் சுற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள விசையைத் திருப்பிவிடுவான்; உடனே ரங்கராட்டினம் சுழலும், வேகமாக; வேடிக்கையாக; சிங்கத்தின் மீது சவாரி செய்வதுபோல, யானை மீது ஏறி ஓட்டுவதுபோல, சிறார்களுக்கு ஒரு மகிழ்ச்சி; குடைராட்டினம் சுற்றச்சுற்ற, சிறார்களுக்குத் தாங்கள் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கும் சிங்கம், புலி, யானை, குதிரை ஆகியவைகளைத் தாமே வேகமாக ஓட்டிக் கொண்டு போவதாக ஒரு நினைப்பு; அதிலே ஒரு மகிழ்ச்சி; ஒரு ஆரவாரம்.

அந்த மகிழ்ச்சி ஆரவாரத்தின் விளைவாக சிறுவர்களுக்கிடையே எழும் உரையாடல்தான், நான் முதலில் குறிப்பிட்டிருந்தது.

இப்போது மறுபடியும் துவக்கத்தைப் படித்துப் பார், தம்பி! இவ்விதமான உரையாடல் நடைபெற்றிருக்கவேவா முடியாது; சொல்லு. இவ்விதமான உரையாடல் உன் காதிலே



# தடுத்தது யாரே, துடிப்பதும் ஏனோ?

விழுந்ததும் என்ன தோன்றும்? சிறுவர்கள் மகிழ்ச்சியால் பேசுகிறார்கள்! — என்று தோன்றுமே தவிர, ஏ! அப்பா! எத்தனைப்பெரியவீரனாக இருக்கவேண்டும் சிங்கத்தின்மீது சவாரி செய்தவன்!! என்று வியந்து, அவன் எதிரே அஞ்சி நின்றிடவேண்டும் என்று தோன்றும். குழந்தைகள் பேசுகின்றன! குடைராட்டினத்தில் உட்கார்ந்து மகிழ்ச்சிபெற்றதால், பேசுகிறார்கள்!—என்றுதான் எண்ணிடத் தோன்றும்,

சிறார்கள், மகிழ்ச்சி காரணமாக இது போலப் பேசுவதைக் கேட்கும்போது, நமக்கேகூட இனிப்பாக இருக்கும்

போயும் போயும் உனக்கு அடுதானு கிடைத்தது; ஏன் யானை கிடைக்கவில்லையா? என்று கேட்டு மகிழ்வோம்!

ஏ! பயலே! நீ பெரிய போக்கிரியடா! கொஞ்சம் கூடப் பயப்படாமல், அவ்வளவு பெரியயானைமீது உட்கார்ந்துகொண்டாயே! என்று கேட்டுக்கொண்டே கன்னத்தைக் கிள்ளிவிடுவோம்.

கேட்டாயா சேதி! நம்ம மகனை என்னமோ மட்டமாகக் கணக்குப் போட்டாயே! தெரியுமா விஷயம்! சிங்கத்தையே அடக்கி, அதன்மீது ஏறி உட்கார்ந்து, பிடரியைப் பிடித்து உலுக்கி உலுக்கி எடுத்துவிட்டான், நம்ம மகன்! என்று பெருமிதத்துடன் கூறி மகிழ்வோரும் உண்டு!

ஆனால், சிறார்கள் அல்ல, பெரியவர்கள்—மிகப் பெரியவர்கள்—குடை ராட்டினத்துப் பொம்மைகளின்மீது உட்கார்ந்து சுற்றிவிட்டு, உண்மையாகவே சிங்கத்தையும் யானையையும் அடக்கிய மாவீரர் போலப் பேசிடக் கேட்டால், எப்படி இருக்கும்? தாங்கிக்கொள்ள முடியாத எரிச்சலைத்தானே மூட்டிவிடும்.

எவனும் என்னைக் கவிழ்க்க முடியாது!

யாருக்கும் நான் பயப்படமாட்டேன்!

எல்லா பணக்காரர்களையும் ஒழித்துக் கட்டிவிடப் போகிறேன்.

இவ்விதம், காமராஜர் பேசுகிறார்! குடைராட்டினத்தில் ஏறி, வேடிக்கை பெற்ற குழந்தைப் பருவத்தினரா, இவர்? இவரா இப்படி, சிங்கபொம்மைமீது உட்கார்ந்து நான் சிங்கத்தின்மீது சவாரி செய்தேன் என்று குதூகலமாகக் கூவிடும் குழந்தைபோல, பணக்காரர்கள் அமைத்துக் கொடுத்திருக்கும் குடைராட்டினம் போன்ற செல்வாக்கின்மீது அமர்ந்து, சுற்றிக்கொண்டு நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன், ஒருவருக்கும் பயப்படமாட்டேன என்று வீராவேசப் பேச்சுப் பேசுவது? ஆனால் பேசுகிறார்! அந்தப் பேச்சு, கேட்டு நாடே, தமது வீரதீரத்தை வியந்து பாராட்டும் என்று வேறு எதிர்பார்க்கிறார்! நாட்டு மக்களை ஏமாளிகள் என்றே தீர்மானித்துவிட்டார்போல இருக்கிறது.

நான் எப்படியும் சோஷியலிசத்தை நடத்தி வெற்றி காணத்தான் போகிறேன்! யாரும் தடுக்க முடியாது!—என்கிறார்.

யாரய்யா பெரியவரே! சோஷியலிசத்தைத் தாங்கள் கொண்டு வருவதைத தடுக்கிறார்கள்? என்று கேட்டால, எல்லோருந்தான்! கம்யூனிஸ்டு கட்சிகள், பிரஜா-சோஷியலிஸ்டு கட்சி, சோஷியலிஸ்டு கட்சி, தி. மு. க., தமிழரசுக் கழகம், சுதந்திரா கட்சி, எல்லாருமேதான்! நான் சோஷியலிசத்தைக் கொண்டு வருவதைத் தடுக்கப் பார்க்கின்றன; கெடுக்கப் பார்க்கின்றன! — என்று இடிமுழக்கம் செய்கிறார்.

இந்த நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிகளுமே, சோஷியலிசத்தை இவர் கொண்டு வருவதைத்தடுக்கின்றனவாம்; எதிர்க்கின்றனவாம். இவருடைய கட்சியில் உள்ள முதளாளிகள் தவிர, மற்ற எல்லோரும் சோஷியலிச விரோதிகளாம்!!

தம்பி! குடைராட்டினம் ஏறி மகிழ்ந்திடும் குழந்தைகள் கூட இப்படி ஒரு வேடிக்கை காட்ட முடியாது! அவ்வளவு வேடிக்கை காட்ட இந்த அகில இந்தியா! தம்மைச் சுற்றிலும், பகைவர்கள் நிற்பது போலவும், தமது வீர தீரத்தால் மட்டுமே அந்தப் பகையை வீழ்த்தி, சோஷியலிசத்தை வெற்றி பெறச் செய்ய முடியும் என்பதுபோலவும் பேசிக்கொண்டிருக்கிறார், அவருடைய பேச்சைக் கேட்டு, அகமகிழ்கிறார்கள். காந்தியார் காட்டிய வழி நடந்த தொண்டர்கள், தியாகிகள் அல்ல, பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு ஆளான வீரர்கள் அல்ல; சோஷியலிசம் மலர்ந்திடின், புது வாழ்வு பெறக் கூடிய ஏழை எளியோர் அல்ல; சோஷியலிசம் எனும் திட்டத்தை நிறைவேற்றி வைக்க எதனையும் இழந்திடவும், எவ்வளவு இன்னலையும் தாங்கிக் கொள்ளவும் தயாராக உள்ள இலட்சியவாதிகள் அல்ல! யார் மகிழ்கிறார்கள் தெரியுமா?

வாண்டையார்
வடபாதி மங்கலத்தார்
நெடும்பலத்தார்
குன்னியூரார்
மூப்பனார்
மன்றாடியார்
மகாலிங்க ஏழையார்
பேட்டையார்
பெரும்பண்ணையார்
செய்யூரார்
வலிவலத்தார்
இலஞ்சியார்
ராமநாதபுரத்தார்
செட்டிநாட்டார்
சிவகெங்கைச் சீமையார்
மோட்டார் மன்னர்
சிமிட்டிச் சீமான்
இரும்புக்கோமான்
அலுமினிய அதிபர்

# ஓநாய் இரத்தம், ஆட்டுக்குத் தானமாம்!

ஆலை ஆள்வோர்

இவர்களெல்லாம், தம்பி! ஆனந்தத் தாண்டவமாடுகிருர்கள், ஈடு எதிர்ப்பற்ற எமது மாபெருந் தலைவர், பணக்கார ஆதிக்கத்தை அழித்து ஒழித்து, சோஷியலிசத்தைக் கொண்டுவரப்போகிருர்!! யார் தடுத்தாலும், அஞ்சமாட்டார்! எவர் எதிர்த்திடினும், முறியடித்தே தீருவார்! சோஷியலிசம் வெற்றிபெற்றே தீரும்! எமது மாபெருந்தலைவர், எமது உள்ளம் குளிர்ந்திட, உவகை பெருகிட, சோஷியலிசம் கொண்டுவரப்போகிருர்! கம்யூனிஸ்டுகளே, உமது எதிர்ப்பு எமக்குக் கடுகு! சுதந்திராக்களே! உமது எதிர்ப்பைச் சுட்டுப் பொசுக்கிச் சூரணமாக்கிப் போடுவோம்! ஏ! திராவிடர்களே! தீர்த்துக் கட்டிவிடுகிரேம் உங்களை! சோஷியலிஸ்டுகளே! உங்களை ஒழித்துக்கட்டப்போகிரேம்!! என்றெல்லாம் பாடுகிருர்களாம். ஆனந்த நடனம் ஆடுகிருர்களாம், எப்போது வரும் இந்த சோஷியலிசம்! கண்குளிரக் காண வேண்டும்! — என்று வழிமேலே விழிவைத்துக் காத்துக்கொண்டிருக்கிருர்களாம்; நம்பச் சொல்லுகிருர், காமராஜப் பெரியவர்.

மதப்புரட்டுகளை ஒழிக்கப் போகிறேன் என்று ரஸ்புடீன் சொன்னதில்லை.

கொடுங்கோலாட்சியை வீழ்த்தப் போகிறேன் என்று ஜார் சொன்னதில்லை.

எதேச்சாதிகாரத்தை அழித்திடப் போகிறேன் என்று பிரன்சு நாட்டு மன்னன், லூயி சொன்னதில்லை.

ஆனுல், காங்கிரசிலே உள்ள முதலாளிகள், சோஷியலிசத்தைக் கொண்டு வரப் போகிரேம், சோஷியலிசத்தைக் கொண்டு வரச்சொல்லி, எமது தலைவர் காமராஜரை வற்புறுத்திக் கொண்டு வருகிரேம்; அவர் சோஷியலிசம் கொண்டு வர அரும்பாடு படுவதற்கு நாங்கள் துணையாக நிற்கிரேம், அவருடைய துணை கொண்டு சோஷியலிசத்தைக் கொண்டு வந்தே தீருவோம்—என்று சொல்லுகிருர்களாம். நம்பச் சொல்லுகிருர்கள், காங்கிரஸ் கூடாரத்தில் நாவாணிபம் நடாத்திடும் நல்லோர்கள்!!

இரத்த சோகை நோயால் பீடிக்கப்பட்டுள்ள ஆடுகளுக்கு, ஓநாய் 'இரத்த தானம்' தரப் போகிறதாம்! டாக்டர் காமராஜர் இரத்தம் எடுத்து, ஆடுகளுக்குச் செலுத்தப் போகிருராம்! நம்பச் சொல்லுகிருர்கள், நாட்டு மக்கள் எதைச் சொன்னுலும் கேட்டுக்கொள்ளுவார்கள் என்று ஒரு தவருன கணக்குப் போட்டுக் கொண்டு.

நிலமில்லாத உழவன்
நிம்மதியில்லாத பாட்டாளி
மாடாய் உழைக்கும் தொழிலாளி
வரண்ட தலையினன்
இருண்ட கண்ணினன்
இல்லையே! இல்லையே! என்று ஏங்குபவன்,

கொண்டு போய்விடு கடவுளே! என்று இறைஞ்சுபவன்.

குணம் தேடுபவன்! மரக்கிளை நாடுபவன்!

குமுறிக் கிடப்பவன்! குற்றுயிரான்!

தம்பி! இவர்களெல்லாம் கூடப் பெறமுடியாத ஆனந்தத்தை ஊரை அடித்து உலையிலே போட்டிடும் உத்தமர்கள், ஒன்றை ஒன்பதிற்கு விற்று கொள்ளை இலாபம் அடித்திடும் குணாளர்கள், இருப்பை மறைப்போர், இருப்பதை மறைப்போர் இலாபத்தை மறைப்போர் போன்ற திருவாளர்கள் பெறுகின்றனராம், சோஷியலிசத்தை எப்படியும் கொண்டு வந்தே தீருவேன், எந்த எதிர்ப்புக்கும் அஞ்சமாட்டேன் என்று காமராஜர் கூறுவது கேட்டு. நம்பச் சொல்லுகிருர்கள்!!

இவர்களை உடன் வைத்துக்கொண்டு தான் காமராஜர் பேசுகிருர், நான் பணக்காரர்களை ஒழித்துக் கட்டுவேன் என்று!

இவருக்கு 'சீடர்களாக' நின்றுகொண்டு தான், இந்த முதலாளிமார்கள் கூறுகிருர்கள் எம்மை ஒழித்திட வந்த தலைவனே வாழ்க!! எமக்கு முடிவுகட்ட வந்திருக்கும் முதல்வனே வாழ்க! வாழ்க!—என்று. நம்பச் சொல்லுகிருர்கள், தம்பி! எதையும் ஆய்ந்தறியும் திறனை இயல்பாகவே பெற்றுள்ள தமிழர்களைக்கூட!!

சோஷியலிசம் வெற்றி பெற்றுல்......! என்று கூறிவிட்டு, காங்கிரஸ் பேச்சாளர்—காங்கிரஸ்காரர் அல்ல—பேச்சாளர்!—கண்களை மூடுகிருர், அவர் மனக்கண் முன் தோன்றிடும் காட்சிகளை எடுத்துக் காட்டுகிருர்.

மாளிகையிலே சிலர்
மண்குடிசையிலே பலர்!
அரண்மனைகளிலே சிலர்

## போதாதா!!!

“....இரும்புத் தொழிற்சாலை என்ருல், உடனே கடையில் வாக்கிவந்துவிட முடியாது; அடுத்த நாட்டிலிருந்தும் உடனே கொண்டு வந்துவிடமுடியாது!! பலநாட்டு நிபுணர்களை வைத்து, தொடர்ந்து பரிசீலனை செய்ததன்பேரில், இப்போது அது திட்டக் குழுவின் பரிசீலனை அளவில் எட்டிவிட்டது!!!

தமிழக முதலமைச்சர் அருளிய அருளுரை இது.

பல ஆண்டுகள் தேவையாம்!!

ஐயா முதலமைச்சரே, மூன்ரும் திட்டம் எந்த ஆண்டு தொடங்கியது நினைவிருக்கிறதா? இரண்டாம் திட்டத் தொடக்கத்தில் சேலம் இரும்பாலை, பிரச்னையாக்கப்பட்டது என்பதாவது நினைவுக்கு வருகிறதா?

ஆண்டுகள் போதாதா?...நீங்கள் ஆண்டதும் போதாதா?

# சிறுர்தம் பேச்சு, சிந்தென இனித்தல்போல்

ஆலமரத்தடியில் பலர்!
செல்வத்தில் புரண்டபடி சிலர்
செல்லரித்த வாழ்வினா பலர்!

இந்த நிலைமை இருந்திடாது! எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடலாம்! எங்கும் இன்பம்! எவருக்கும் புது வாழ்வு, நல்வாழ்வு, முழு வாழ்வு!!

இன்று பார்க்கிறோமே, அதோ கோடீஸ்வரர், கப்பல் வியாபாரத்தில் சம்பாதித்தவர்! இதோ பல இலட்சங்களுக்கு அதிகாரி, பல ஆலைகள் நடத்திப் பணம் திரட்டியவர்! அதோ சீமான், வாணிபத்தில் கிடைத்த இலாபம் பெற்றவர்!! பொருளாதாரத் துறையில் இதுபோல 'ஏகபோக மிராசு' பாத்யதை பெற்றிருப்பவர்களெல்லாம் இருக்க முடியுமா?

இருக்கவிடப் போவதில்லை! இருக்கவிடமாட்டார் எமது தலைவர்! என்று வீரம் சொட்டச்சொட்ட பேசுவர். ஆனால் இதனை ஒரு குறும்புப் புன்னகையுடன் யாரார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்?

பெரிய நிலச்சுவான்தாரர்கள்
மாஜி-மன்னர்கள்
பல கம்பெனிகளின் அதிபர்கள்

என்ன எண்ணிக்கொண்டு, இவர்கள் காமராஜர் பேசுவதையும் அவருக்கு 'லாலி' பாடிடுவோர் பேசுவதையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்?

துவக்கத்திலே நான் காட்டினேனே உரையாடல். நான் சிங்கத்தின் மீது சவாரி செய்தேன், நான் யானை மீது சவாரி செய்தேன். நான் குதிரையை ஓட்டிச் சென்றேன் என்று குடைராட்டின' வேடிக்கை பெற்ற குழந்தைகள் பேசிக்கொள்வதாக, அந்தப் பேச்சு போன்றது, காமராஜரும் அவருடைய புகழ்பாடிகளும் பேசுவது என்றுதான் எண்ணிக்கொள்வாகள்.

சிறுர்களின் பேச்சு எப்படி சிந்துபோல இனிக்கிறதோ, பெற்றோர்களுக்கு, அது போல காமராஜர் கூட்டத்தாரின் பேச்சு இனிக்கிறது அவர்களை ஊட்டி வளர்த்திடும் முதலாளிமார்களுக்கு.

ஆகவே அவர்கள் அத்தகைய பேச்சைக் கேட்டு வேடிக்கை பெறுகிறார்கள்; மேலும் பேசச் சொல்லி உற்சாகப்படுத்துகிறார்கள்!

உள்ளபடி சோஷியலிசத்தைக் கண்டிடும் நடவடிக்கையிலே ஈடுபட்டாலோ, பெரிய புள்ளிகளின் இலாபவேட்டைக்குக் குந்தகம் விளைவிக்கும் செயலில் இறங்கினாலோ, இந்த 'இலாபவேட்டைக்காரர்கள்' இப்படியா மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டிருப்பார்கள்!

பேதையும் அவ்விதம் கூறிட மாட்டானே!

சிறுர்களின் பேச்சுகேட்டு மகிழ்ந்திடும் பெற்றோர் போல, சோஷியலிசம் பேசும் காங்கிரஸ் தலைவர்களிடம் முதலாளிகள் நடந்துகொள்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம்,

காங்கிரஸ் பேசிடும் சோஷியலிசம் வெறும் பேச்சு என்பதை அவர்கள் உணர்ந்திருப்பதனால்தான்;

காங்கிரஸ், சோஷியலிசத்தைப் பேசிக்கொண்டே, முதலாளிகள் மேலும் மேலும் பணம் திரட்டிக்கொள்ளவழிசெய்துகொடுக்கிறது, துணைநிற்கிறது என்பதனை முதலாளிகள் அறிந்திருப்பதனால்தான்.

அதே முதலாளிகள், காங்கிரஸ் தலைவர்களின் பேச்சு, பேச்சோடு நிற்கப்போவதில்லை, செயலிலே அவர்கள் ஈடுபடப்போகிறார்கள், முதலாளிகளின் ஆதிக்கத்தைமுறியடிக்கப்போகிறார்கள் என்று தெரிந்துகொண்டால், இன்று காட்டுகின்ற கனிவா காட்டுவார்கள்? இன்று அவர்கள் காங்கிரசிடம் கனிவு காட்டுவது மட்டுமல்ல, சோஷியலிசத்துவத்திடமே கூட அல்லவா கனிவு காட்டுகிறார்கள்!! வேங்கை சைவத்தின் மேன்மைபற்றி உருகிப் பேசுவதுபோல அல்லவா, இந்த முதலாளிகள், சோஷியலிசம் கொண்டுவரப்போவதாகக் கூறும் காங்கிரஸ் கட்சியின் மேன்மைபற்றி உருக்கத்துடன் பேசுகின்றனர்!

ஏழ்மையும் அதன் விளைவாக அறியாமையும் இந்த நாட்டிலே எவ்வளவு அழுத்தமாகக் கப்பிக்கொண்டிருப்பினும், வெகு எளிதாக மனமயக்கம் கொண்டுவிடக் கூடிய நிலையிலே பெரும்பாலான மக்கள் இருந்திடினும், இவ்வளவு பச்சையான புரட்டுப் பேச்சை, இவ்வளவு வெளிப்படையாகத் தெரிகிற முரண்பாடுள்ள போக்கை மக்கள் நம்பிடப்போவதில்லை. முதலாளிகள்கூடி, சோஷியலிச விழா நடாத்தி, காமராஜர் சோஷியலிச சிற்பி என்று பேச்சாளர்களைவிட்டு போழியச்செய்து மகிழ்வதைக் காணும்போது, என்ன நேர்த்தியான நாடகம் நடத்துகிறார்கள்! என்று எண்ணுமலிருக்கமுடியுமா!

கடன் கொடுத்து, தவறான கணக்குக் காட்டி, நிலபுலத்தைக் கைப்பற்றிக் கொண்டவன்,

விளைந்தது அவ்வளவையும் அறுத்தெடுத்துக் குவித்ததும், களஞ்சியத்திலே கொண்டுபோய்ச் சேர்த்துக்கொண்டு காலம் முன்போல இல்லை! கலம் நெல் கூலியாகத் தருவதற்கு இல்லை!—என்று பேசி, உழைத்தவன் வயிற்றில் அடித்திடும் உத்தமன்,

கள்ளச் சந்தையில் திரட்டிய பணத்தை தங்கக் கட்டிகளாகவும், மின்னும் வைரங்களாகவும் மாற்றி பதுக்கி வைத்துக்கொண்ட பரந்தாமன்

இவர்களெல்லாம் கூடி, காங்கிரசை சோஷியலிசம் பேசச் சொல்லிக் கேட்டு மகிழ்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளவா, ஏழை எளியோர்களால் முடியாது! அவர்கள் அச்சம் காரணமாகப் பேசுவதில்லை. பேசினால்? ஏடு கொள்ளாது! நாடாள்வோர் தாங்கிக் கொள்ளமாட்டார்கள்! வேடிக்கையா காட்டுகிறீர்கள் வேடிக்கை! வேதனையிலே எங்களைத் தள்ளிவிட்டவர்கள் நீங்கள்! எமது உழைப்பின் பலன் எமக்கு வந்திருந்தால் நாங்கள் ஏன் இப்படி உழல்கிறோம்? அந்தப்

# அஞ்சமாட்டாராம்! அறிவிக்கிறார் இப்படி!

பலனை அபகரித்துக்கொண்டு, சீமானாகி கனவானாகி, இப்போது எங்களையே பார்த்து ஐயோ! பாவம்! துரும்பாக இளைத்துவிட்டாயே! பால் தருகிறேன் குடி! பழம் தருகிறேன் சாப்பிடு!—என்று பசப்புப் பேச்சுப் பேசுகிறீர்கள்—என்றெல்லாம் கொதித்துக் கூறுவான. ஆனால் அவனை, அவனுடைய ஏழ்மை மனதில் பட்டதைச் சொல்ல முடியாதபடி தடுக்கிறது.

> ஏழை ஏதும் பேசாது இருப்பதையே அவன் தன் ஒப்புதலைத் தந்துவிட்டான் என்று, காங்கிரஸ் தலைவர்கள் கருதிக் கொள்கிறார்கள்.
>
> **ஏழை பேசவில்லை! பெருமூச்செறிகிறான்! அந்தப் பெருமூச்சு, பேச்சைவிட வலிவு மிக்கது.**
>
> **பெருமூச்சு வளர்ந்து வளர்ந்தே, புரட்சியாக வடிவம் கொண்டிருக்கிறது; பல்வேறு நாடுகளில்.**
>
> ஏழையை ஏய்த்துவிட்டோம், மயக்கிவிட்டோம் என்ற எண்ணத்துடன் முதலாளிகள் முகத்திலே புன்னகையும், அக்ரமம் நடக்கிறது, அதனைத் தடுக்க முடியவில்லை; அக்ரமம் நடக்கிறது என்று வெளியே பேசவும் முடியவில்லையே என்று குமுறி ஏழையிடமிருந்து கிளம்பிடும் பெருமூச்சும்—இன்று காண்கின்றோம். தம்பி! நெருக்கடி மிக்க கட்டம் என்பதனைத்தான் இந்த நிலை எடுத்துக் காட்டுகிறது.

நிலை இது போலிருக்க, 'அகில இந்தியா' மார்தட்டுகிறார், என்னையாரும் கவிழ்க்க முடியாது, நான் யாருக்கும் அஞ்சப் போவதில்லை, சோஷியலிசம் ஏற்பட்டே தீரும் என்றெல்லாம் பேசுகிறார்.

வேடிக்கையான பேச்சு! குழந்தை வீரத்தைப் பொழிந்து தள்ளுகிறது!! என்று பெற்றோர் குழந்தையைத் தட்டிக் கொடுப்பதைப் போல காமராஜரைத் தட்டிக் கொடுக்கிறார்கள், பேசு! பேசு! நன்றாகப் பேசு! நிறையப் பேசு! சோஷியலிசம் பேசு! கேட்டு, கை தட்டுகிறோம்!—என்று முதலாளிகள் கூறுகிறார்கள்.

அதே முதலாளிகளுக்கு ஏதாகிலும் தமக்குக் கேடு தரும் காரியம் நடந்துவிடக் கூடுமோ என்ற சந்தேகம் துளி தோன்றினாலும், தட்டிக்கொடுப்பதை நிறுத்திவிட்டு கூப்பிட்டுக் கேட்கிறார்கள், "என்ன இது, பேச்சு ஒரு தினுசாக இருக்கிறதே?' என்று.

பார்த்தோமல்லவா, பாங்குகளை நாட்டுடைமை ஆக்க வேண்டுமென்று எர்ணாகுளத்திலே காங்கிரஸ் ஒரு பேச்சுப் பேசியதும், முதலாளிகள் சீறியதை.

பம்பாயில் அமைச்சர் பட்டீலை, அழைத்து வந்து தம் எதிரிலே நிற்கவைத்துக் கொண்டு செல்வபுரியினர், விளக்கம் தந்திடச் சொன்னார்களே!

அமைச்சர் பட்டீலும், அடக்க ஒடுக்கத்துடன். பற்று பாசத்துடன். முதலாளிகளிடம் விளக்கம் அளித்தாரே! இதழிலே கண்டோமல்லவா.

ஒரு தீர்மானம், ஒப்புக்குப் போட்டோம் பாங்குகளைத் தேசிய மயமாக்குவோம் என்று; அதற்கேவா இப்படி அச்சம் கொள்வது என்றெல்லாம் பட்டீல் சமாதானம் செய்திருக்கிறார்.

உண்மையாகவே சோஷியலிசம் கொண்டு வருபவர்களாக இருந்தால் இப்படியா. முதலாளி ஒரு துளி கவலைப்பட்டாலும், முகத்தைச் சுளித்துக் கொண்டாலும், அவன் முன் முழங்கால் படியிட்டு விடுவார்கள்.

ஏன் அந்தவிதமான அச்சம், முதலாளிகளிடம்? சோஷியலிசம் பேசுபவர்களுக்கு? காரணம், பட்டீல் அறிவார்; காமராஜருக்கும் தெரியும். அவர்கள் ஊட்டி வளர்ப்பவர்கள்! அவர்கள் கொடுத்தபடி இருக்கும் பல இலட்சக் கணக்கான தொகையைக் கொண்டுதான் காங்கிரசின் தேர்தல் வேட்டையே நடந்துவருகிறது. அத்தகைய முதலாளிகள் தயவு கிடைக்காமற் போய்விட்டால், தேர்தல் களத்திலே என்ன கதி நேரிடுமோ என்று எண்ணுகிறபோதே நடுக்கம் எடுக்கிறது. அதனால் முதலாளிகளின் மனம் கோணாதபடி நடந்து கொண்டாக வேண்டும் என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது!

இந்த இலட்சணத்தில் வீரப் பேச்சு வேறு!!

முதலாளிகள் காங்கிரசை எந்த அளவுக்கு ஆட்டிப் படைக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு நிகழ்ச்சி, டில்லியில் சில நாட்களுக்கு முன்பு நடந்தது

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, பாராளு மன்ற உறுப்பினர்கள் சிலர் கூடிப் பேசியிருக்கிறார்கள் எதைப் பற்றி?

> முதலாளிகள் காங்கிரசுக்குள் நுழைந்து கொண்டு ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதுபற்றி.
>
> முதலாளிகளுக்கும் அவர்களின் தயவு பெற்றவர்களுக்குமே தேர்தலில் வேட்பாளர்களாக நிற்கும் வாய்ப்புத்தரப்படுகிறது என்பதுபற்றி.

காங்கிரஸ் கட்சியை முதலாளிகள் ஆட்டிப் படைக்கிறார்கள் என்று. தம்பி! நாம் சொல்லும் போது, சீறிச் சீறிப் பேசுகிறார்களே, அவர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்? காங்கிரஸ் எம். பிக்களே அல்லவா கூடி, கை பிசைந்து கொள்கிறார்கள்; கண்களைக் கசக்கிக்கொள்கிறார்கள்!

---

**யாருக்குச் சொல்கிறார்**
**இந்த சர்வாதிகாரி?**

"........என்னைப் பய முறுத்தாதீர்கள். பயப்படுபவன் நான் அல்ல, நான் நினைத்தால் உங்கள் அஸ்திவாரமே ஆட்டங்கண்டுவிடும்.

--கள்ளக்குறிச்சியில் காமராசர்.
(விடுதலை 3-11-66)

---

# ஆங்கில ஏட்டின் அறிவிப்பு காணீர்!

காங்கிரசிலேயே ஒரு பகுதியினர் கூடிக் கதறிடும் நிலைமையே உருவாகி விட்டிருக்கிறது, முதலாளிகளிடம் காங்கிரஸ் சிக்கிக் கொண்டதன் விளைவாக!

காங்கிரஸ் கட்சியையே தமது கருவியாக்கிக்கொண்டிட முதலாளிகளால் முடிந்திருக்கிறது. அந்த முதலாளிகளிடம் சிக்கிக் கொண்டுள்ள காங்கிரசைத்தான், சோஷியலிசத்தை நிறைவேற்றப்போகும் கட்சி என்று காமராஜர் கூறுகிறார்; கூறுகிறாரா? முழக்கமிடுகிறார்!!

காங்கிரஸ் கட்சியே முதலாளிகளிடம் மண்டியிட்டுக் கிடக்கவேண்டி நேரிட்டுவிட்டது என்று, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குமுறிப் பேசியிருப்பதுபற்றி, டில்லி, 'Patriot'—பேட்ரியட்—எனும் ஆங்கில நாளிதழ், அக்டோபர் 20ல், எழுதியிருப்பதனைத் தருகிறேன். தம்பி, காங்கிரஸ் சோஷியலிசத்தைக்கொண்டு வர முடிகிறதா இல்லையா என்பதுகூட ஒருபுறம் இருக்கட்டும், காங்கிரஸ் கட்சி, தன்னைத் தான் காப்பாற்றிக்கொள்ளும் வலிவுடனாவது இருக்க முடிகிறதா என்பதுபற்றி எண்ணிப் பார்க்கும்படி, காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக் கொள்.

At a meeting in the Capital on Tuesday a large number of Congress M. P.'s expressed concern at the infiltration of the Congress by Big Business and feudal relics. The fears & expressed by M.P.'s are based on a major concerted effort being made by reactionary elements and their intelligent stooges to gain entry on a large scale into the legislative organs on the Congress ticket. The warning is timely because in many states Congress Bosses are hob-nobbing with Capitalists and former princelings and in some case have entered into secret alliances with them.

செவ்வாயன்று தலைநகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பலர், ஜெமீன் பரம்பரையினரும் பெரிய முதலாளிகளும், காங்கிரசுக்குள் நுழைந்துகொண்டு விட்டிருப்பதுபற்றி கவலை தெரிவித்துப் பேசினர். காங்கிரஸ் கட்சியின் 'டிக்கட்' பெற்று ஆட்சி மன்றங்களிலே இடம் பிடித்துக்கொள்ள, முதலாளிகளும் பிற்போக்காளரும் அவர்களின் கைக்கூலி அடிமைகளும் திட்டமிட்டு வருகின்றனர் என்ற ஆதாரமே, காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்டுள்ள அச்சத்துக்குக் காரணம் (அவர்களின்) எச்சரிக்கை சரியான நேரத்தில் தரப்பட்டிருக்கிறது; ஏனெனில் பல மாநிலங்களில் காங்கிரஸ் பெருந்தலைவர்கள் மாஜி-மன்னர்களுடனும் முதலாளிகளுடனும் கூடிக் குலவிக்கொண்டு வருகின்றனர். சில இடங்களில் இரகசிய ஒப்பந்த உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

தம்பி! பேட்ரியட் தலையங்கத்தின் கருத்தைத் தமிழாக்கித் தந்துள்ளேன்.

நிலைமை இவ்விதம் இருக்கிறது; ஆனால் காமராஜரோ நீண்ட பேச்சுப் பேசுகிறார்; சோஷியலிசம் கொண்டுவரப்போகிறேன் என்று; அதனைச் செய்திட காங்கிரஸ் கட்சியால்தான் முடியும் என்று நம்பச் சொல்கிறார். எப்படி நம்பிக்கைகொள்ள முடியும்—நடுக்கொள்ளைக்காரர்கள் அவ்வளவு பேர்களும் அங்கு நடுநாயகர்களாக இருப்பது கண்கூடாகத் தெரியும் போது.

சோஷியலிசம் பேசுகிறார் காமராஜர் என்றால், பேசுவதற்கு முதலாளிகள் அனுமதித்து இருப்பதால் பேசுகிறார்.

ஏழை எளியோர் காதுகளுக்கு இசையாக இருக்கட்டும் என்பதற்காகப் பேசுகிறார்.

செயலில்? முடியாது! விடமாட்டார்கள்! இன்று காங்கிரஸ் கொண்டுள்ள அமைப்பு முறை அதற்கு இடம் கொடுக்காது; அது முதலாளிகளின் 'பாசறை'யாக ஆகிவிட்டிருக்கிறது.

சோஷியலிசம் பேசலாம்; செயல்படுத்த முடியாது என்று தம்பி! நான் கூறுகிறபோதுதான் கோபம் கோபமாக வருகிறது அவர்களுக்கு; ஆனால் அவர்களின் பெருந்தலைவர் காமராஜரே, ஜெய்பூர் மாநாட்டிலே பேசினார்; தெரிந்துதான் பேசி இருக்கவேண்டும்! என்ன பேசினார் என்பதனை நான் ராஜ்ய சபையிலேயே எடுத்துரைத்தேன்.

பதினேழு ஆண்டுகளாக நாம் சோஷியலிசம் பேசுகிறோம்; ஆனால் செயல்படுத்தவில்லை.

ஏழை-பணக்காரர் பேதத்தைப் போக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, அதனைக் குறைக்கக்கூட நம்மால் முடியவில்லை.

இந்தக் கருத்துப்படவே காமராஜர் பேசியிருக்கிறார்.

அதனையே நாம் சுட்டிக் காட்டும்போது 'சுரீல்' என்று கோபம் பிறக்கிறது; விட்டேனா பார்! என்று வீராப்பு பேசுகிறார்.

காங்கிரசில், மாஜி—மன்னர்களையும் தொழில் அதிபர்களையும் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு சேர்த்துக் கொண்டு, அவர்களிடம் இலட்ச இலட்சமாகப் பணமும் 'கை நீட்டி' வாங்கிக்கொண்டு, அதைக் கொண்டு ஓட்டு வேட்டை ஆடிக்கொண்டு, நான் சோஷியலிசத்தைக் கொண்டு வரப் போகிறேன் என்று பேசி வருவது, குடைராட்டினத்துச் சிங்கப் பொம்மை மீது உட்கார்ந்து கொண்டு, என்னைச் சாமான்யமாக எண்ணிக் கொள்ளாதீர்கள்; நான் சிங்கத்தையே அடக்கி, அதன் மீது சவாரி செய்பவன்! என்று சிறுவர்கள் பேசி, கேட்பவர்களுக்குச் சிரிப்பு மூட்டுவதற்கு ஒப்பானதாகும். இல்லையா!

அண்ணன்,

அண்ணாதுரை

2-ம் பக்கத் தொடர்ச்சி

இறங்கி ஓடினான் அவ்விளைஞன் குமார்.

நடுநிசியின் அமைதியைச் சாடுவதுபோல தவளைகள் ஒலி எழுப்பிக்கொண்டிருந்தன. ஓநாயோ அன்றி நாட்டு நாயோ நீண்ட தூரத்தில் ஓலமிட்ட சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது.

இரயில் இன்னும் புறப்படவில்லை. ஈசல்கள் போல் இரயிலை விட்டு இறங்கிய மக்கள் குழாம், பாம்புகள் புற்றிலே வந்து அடங்குவதுபோல் இரயிலில் ஏறி அடங்கி ஒடுங்கினர். ஆனால் குமார் இன்னும் திரும்பவில்லை.

இரயிலோ நகரத் தொடங்கியது' இறைக்க இறைக்க ஓடிவந்தான் குமார்; முணுமுணுத்த வண்ணம் இரயில்பெட்டியில ஏறினான். குமாரின் வெளிறிட்ட முகத்தைப் பார்த்தபோது அவனோடு ரயில் நிலையத்தில் பேசிக்கொண்டிருந்த பாவையின் நினைவு சந்திரசேகரனுக்கு வந்தது. அவள் பின்னால் பிணைக்கப்பட்டுள்ள பெட்டியொன்றில் ஏறிவந்து மனம் உடைந்து ஓடும் இரயிலிலிருந்து விழுந்தனளோ?—இறந்தனளோ?...என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் மின்னல்போல் பளிச்சிட்டது. அவ்வாறு இருக்காது, இருக்கக்கூடாது எனவும் உள்ளம் வாதிட்டது.

உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி பீறிட்டுக்கொண்டு வந்தது. சந்திரசேகரன் கேட்டான். "புறப்பட்ட இடத்தில் பேசிக்கொண்டிருந்தாளே அந்தப் பெண்——?"

"அவள் ஏன் இங்குவந்து சாகிறாள்? புறப்பட்ட ரயில் நிலையத்தோடு நின்றுவிட்டாளே!" என்று முடித்த குமார் மீண்டும் தொடர்ந்தான்.

"இவள் வேறொருத்தி—என்று எண்ணினேன்; அவளும் இல்லை" என்றான்.

சந்திரசேகரன் திடுக்கிட்டான். இந்த இரயிலிலிருந்து வேறொருத்தி விழுந்து சாகக்கூடும் என்று எண்ணுகிற இவனை அறிந்துகொள்ளாமல இருப்பது அறிவீனம்; சமூகத் துரோகம். மனம் அவனை கசக்கிப் பிழிந்தது. வெட்டிப் பேச்சு வேண்டா என உதடடுக்குள் ஒட்டிய நா, கொட்டிடும் மனித உருவினிடம் பேசுமாறு கட்டளையிட்டது.

உண்மையை அறிய விழைகின்ற விழைவை அடக்கிவைப்பது, 'எரிமலையை கரித் துணியால் மூடிவைப்பதை ஒக்கும்! நேரடியாக கேட்டான், சந்திரசேகரன்.

"வேறொருத்தி விழுந்து சாவாள் என எப்படி உங்களால் எண்ண முடிந்தது?'

"இதே இரயிலில் ஒருத்தி பயணம் செய்கிறாள் — அவள் — அவளாக இருக்குமோ? என எண்ணினேன்"


அவனது முகத்தில் எரிமலை வெடிப்பது போன்ற உணர்ச்சி; ஆழ்கடல் குமுறுவதைப் போன்ற ஒரு நிலை; முறுக்கேறிய அவன் நரம்புகள் வெடித்து விடுமோ என சந்திரசேகரன் பயந்தான்.

தன்னை சிரமபபட்டு அடக்கிக் கொண்டான். சிறிது நேரத்தில் அறிவு தெளிந்தான் குமார். பின் விளக்கினான்:

"நான் கல்லூரியில் அவளை முதன் முதல் கண்டேன். அவள் அழகும் பண்பும் என்னைக் கவர்ந்தது. அன்பு ஆர்வமாகி காதலாகக் கனிந்தது. அவளைக் காணும்போதெல்லாம் புன்முறுவல் தவழவிட்டேன். அவளோ இதயத்து அன்பினை, சிவக்கும் இதழில் மறைத்துசென்றிட்டாள். பேச முற்பட்டேன். கண்ணொடு கண் நோக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில என்பதுபோல் நடந்தாள். காலம் கனியட்டும் என இரவு பகலாக எண்ணாத எண்ணமெலாம் எண்ணி எண்ணி காத்திருந்தேன். கல்லூரிப் படிப்பும் முடிந்தது. தேர்வுகளும் கடந்தன. காலமும் கனிந்தது. ஆனால் எனக்கல்ல! அவளுக்கு. ஆம்! வேறொருவனுக்கு அவள் மாலையிட்டாள்."

பெருமூச்சு வாங்கிற்று அவனுக்கு. மீண்டும் தொடர்ந்தான்.

"என் ஆண்மையை பெண்மைக்கெதிரே மண்டியிடச் செய்தேன். மண்டியிட்ட என் காதலை, இரக்கமின்றிக் கொன்றிட்டாள் அவ்வகங்காரி. என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை, அவளைப் பழிவாங்க என் உள்ளம் துடித்தது. அதுவே என் வாழ்வின் இலட்சியமாயிற்று. மணம் பூண்டபின் அவளோ கணவனோடு மறைந்து வாழ்ந்திட்டாள். அவளிருக்குமிடம் தெரியாமல் தவித்தேன் தேடினேன், தேடிக்கொண்டே அலைந்தேன். பாவி அவள் கண்ணிலேபடவில்லை. ஆர்வத்தில், ஆத்திரத்தில் அவள் சாயல் கொண்ட பெண்களை எல்லாம் பின் தொடர்ந்து அலுத்தேன். ஏமாந்தேன். ஏமாற்றம் என்னுள்ளத்தைத் துவளவைக்கவில்லை. இதற்கிடையில் ஒரு பேதைப் பெண் ஏமாந்தாள். நான் அவள் சாயல் கண்டு தொடர்ந்து சென்றதைக் கொண்டு தன்னைக் காதலிப்பதாக



# தொண்டு தொடங்கட்டும்!



"நாணய மதிப்பைக் குறைத்ததன் காரண மாக, இந்தியாவா? நாணயத்தையே குறைத்தவர் களாயிற்றே?" என்று உலக நாடுகளில் இகழ்ச்சி யாகப் பேசுகிறுர்கள்!

"இப்படி, நாட்டின் மதிப்பையே-நாணயத் தையே குறைத்துவிட்ட கட்சியிடம், இனியும நாட்டை எப்படி மக்கள் ஒப்புவிப்பார்கள்? ஆகவே இவர்களது யோக்கியதையைப்பற்றி நாட்டு மக் களுக்கு இன்னும் பட்டியல் போட்டுக் காட்டத் தேவையில்லை!"

"இப்போது நமக்குள் இருக்கின்ற பிரச்சினையெல்லாம், ஆட்சியை மாற்றியமைக்கவேண்டிய பணியில் நம்மில் ஒவ்வொருவருடைய பங்கும் என்ன என்பதுதான்! இதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்-எந் தெந்த வகையில உங்கள் தொண்டு இருக்கப்போகிறது-ஆகிய இவற்றை ஒவ்வொருவரும் ஆலோசித்து முடிவு செய்துகொண்டு, நாளை முதல் நமது பணியைத் துவக்கவேண்டும்."

எண்ணி என்னைத் தொடர்ந்தாள். காதலிக்கவே தொடங்கிவிட்டாள். அவளிடம் நான் உண்மையை மறைக்கவில்லை, விளக்கிச் சொன்னேன். பழிவாங்கும் எண்ணத்தை எண்ணியபடி முடிப்பேன் எனவும் உரைத்தேன்.

அவளோ அது ஆகாது கூடாது, தகாதுஎனத்தடுத்தாள். தடுத்தவள் தன்னை ஆட்கொள்ளச சொன்னுள். அன்பைக்கொட்டி அத்தான் ஆகுங்கள் என்ருள்."

பேசப்பேச அவன் மனம் குமுறுவதைக் கண்டான் சந்திரசேகரன.

மீண்டும் குமார் தொடர்ந்தான். "ஆண்டுகள் சில ஆகிய பின்னும் பழிவாங்கும் நிலையினின்று என் மனம் தடம் புரளவில்லை. புதிய காதலியை உதறினேன். என்னை வஞ்சித்த வஞ்சியை ஒரு நாள் மாநகரில கண்டேன். தமக்கை வீட்டில் தங்கியிருந்தாள. தெரிய வேண்டுவனதெரிந்துகொண்டேன். இதே ரயிலில் தன்னூர் செல்கிருள். தொடர்ந்து சென்று அவளை......" சொல்லி முடிக்க வில்லை அவன். கரித்தூள ஒன்று கண்ணில் விழுந்திருக்கவேண்டும் அவன் முகம் சுட்ட பழம்போல் வெதும்பியது.

பழிவாங்கும் உணர்ச்சி அவன் உடலெல்லாம் பரவியுள்ளதோ!

நித்திராதேவி சந்திரசேகரனை வேகமாக அணைத்துக்கொண்ட நேரம், கேள்விகள் கேட்க அவன் மனம் விரும்புவதுபோல்இருந்தது. அதையும் மீறிய தூக்கம் அவனை ஆட்கொண்டது.

அந்த இனிமையான தூக்கத்திலிருந்து அவன் விடுபடும்போது விடிந்துவிட்டிருந்தது. அவன் இறங்கவேண்டிய இடம் கடந்து இரயில் நீண்டதூரம்வந்து மேலும் ஓடிக்கொண்டிருந்தது.

அவன் எதிரே உட்கார்ந்திருந்த இளைஞனைக் காணும். இறங்கிவிட்டான்போலும்! பேதைப்பெண்ணொருத்தியை பழிக்கு ஆளாக்க நினைக்கும் அந்த இளைஞன் நல்வாழ்வு பெறுவதெங்கே!

எதிர்த்திசையில் வந்த இரயில் ஒன்றில ஏறி மறுபடியும் வந்த வழியே பயணம் செய்தான சந்திரசேகரன். அவன மனம் கனத்தது. நேரம் பெரும் பாரமாய்த் தோன்றியது. இரயில் பாதையைச் சுற்றியுள்ள இயற்கைக் கொஞ்சும் எழில தோற்றம் அவனைக் கவரவில்லை. அன்பு மனைவியைக்காணும் ஆர்வத்தின முன்னே, காலமும், இயற்கைக் காட்சிகளும் என்ன செய்யும்? அவசரமான அலுவலக வேலையாக வெளியூர் சென்ற அவன் இப்போதுதான திரும்பிக் கொண்டிருக்கிருன. அவன புறப்படும் போது, இடையில் சில நாட்கள் உறவினர் வீட்டிற்கு வெளியூர் சென்று வர விரும்பிய மனைவியை, விரைவில் திரும்பி விடுமாறு— தான் வருவதற்கு ஓரிருநாள் முன்னேயே திரும்பி வந்துவிட வேண்டுமெனவும் அன்புக் கட்டளையிட்டிருந்தான். ஆனல அவனே குறிப்பிட்ட காலததிற்கு முன்னதாகவே வேலை முடிந்த மகிழ்ச்சியில் வந்து கொண்டிருந்தான். உள்ளத்தில் ஒரு சந்தேகம். தன் மனைவியும் தான் வந்த ரயிலில் வந்திருந்தால்...! ஒரு வேளை அந்த இளைஞன் பழிவாங்க நினைத்திட்ட அந்த மங்கை நல்லாள்......அவன் அந்த எண்ண ஓட்டத்தை துண்டித்துவிட முயற்சித்தான். "இருக்காது! இருக்காது!" என முணங்கினன் "இருந்தால் என்ன?" என்ற ஒருவலிவிழுந்த குரலும் அவன்உள்ளத்தே இருந்து எழுந்தது. இரயிலோ முன்னையும்விட மெதுவாகச் செல்வதாக அவனுக்குத் தோன்றியது.

திருமணத்திற்கு முன்னும் பின்பும் அவன் எண்ணிய எண்

(16-ம் பக்கம் பார்க்க)


## வாய்வு சூரணம்
**(Stomach Powder)**

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு—பித்த வாய்வு—இடுப்புவாய்வு—இடுப்பு, கைகால் பிடிப்பு முட்டுகள் வலி —அசரிக்கை—செரியாமை—வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நலல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை.)

160 கிராம் டின் ரூ 3—50

தேவைக்கு எழுதவும்:

**S. V. R. கண்டர் சன்ஸ்,**
வாய்வு சூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு
அரிசிப்பாளையம், சேலம்-9.

கிடைக்குமிடங்கள்:

**தேஜ்பால் & கோ.,**
91, நைனியப்பநாயக்கன் தெரு,
சென்னை-3.

**இளங்கோ கிளீனிக்**
நெல்லித்தோப்பு,
வில்லியனூர் ரோடு, பாண்டிச்சேரி-5.

**சொக்கனுதம் செட்டியார்,**
நாட்டு மருந்துக்கடை
திருப்பாபுலியூர், கடலூர் N. T.

**ராஜா மெடிகல் ஹால்**
31, தாமராஜா கோவில தெரு,
பெங்களூர்.1 (கண்ட)

**E. வல்லாரம்நாடார் & சன்ஸ்**
188-A, தாராவி ரோடு,
பம்பாய்-17.

**ஆதமஜோதி நிலையம்**
நாவலப்பிட்டி, (சிலோன்)

**ஸ்ரீ கணபதி அண் கம்பெனி**
66, பெல்பீலடு ஸ்டிரீட்,
ஈப்போ P.O. (மலேசியா)




**2—23**

## நிலவில் போர்!

'இங்கே நானிருக்கும் செய்தி கனகசேனனுக்கு எப்படித் தெரிந்தது? அய்யோ அப்பாவியாயிற்றே இவர் — தூமகேதுவின் கண்ணில் பட்டுவிடாமல் இருக்க வேண்டுமே! என்ற ஓர் எண்ணம், அஞ்சலையின் மனத்தில் தோன்றியது.

மறுநொடியே அந்த எண்ணத்தை பிதித்தழுத்திக்கொண்டு தூமகேதுவின் கண்ணில் இவன் பட்டால் என்ன, துண்டுதுண்டாக இவனை வெட்டிப்போட்டால் நமக்கென்ன? தூமகேது நாகம் என்றால், இவன் வீரியன் அல்லவா?' என்ற வேறொரு எண்ணம் அவள் மனத்தில் ஓங்கியெழுந்தது!

அந்த வெறுப்போடு அவனைப் பார்த்தாள். அவன் புன்னகையோடு நாணை இழுத்து அம்பைத் தொடுத்தான். அந்த அம்பு விர்ரென்று பாய்ந்துவந்து, உப்பரிகையில் அவள் அருகில் விழுந்தது.

"என்ன துணிவடா உனக்கு? என்று கேட்பதைப்போல, ஆத்திரத்தோடு அவனை முறைத்துப் பார்த்தவிட்டு, வேகமாகத் திறந்த வெளியினின்றும் உள்ளே சென்றாள்.

அவ்வாறு உள்ளே நுழைவதற்கு முன்பு, கீழே கிடந்த அம்பைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டுச் சென்றாள். அவள் மனத்தில் ஆத்திரத் தீ கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது.

அறையினுள் சென்று கட்டிலின் மீது உட்கார்ந்து, முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். இந்த உலகில் நான் தன்னந்தனியவள் என்பதனால் தானே, கண்டவனுக்கெல்லாம், சாலையோரத்தில் பூத்திருக்கும் மலரைப்போல, நான் தோற்றமளிக்கிறேன்!" என்று நினைத்து, அவள் பற்களை நறநறவென்று கடித்தாள்.

'பரசுராமன் எதிர்ப்பட்ட அரசகுமாரர்களை எல்லாம் கொன்றான் என்கிறார்களே—அதைப்போல, என்னை உற்றுப்பார்க்கும் ஒவ்வொருவனையும் குத்திக் கொன்றால் என்ன? அழகான மங்கையரைக் கண்டால், தேவர்கள் மிருகங்களாகிவிடுவார்கள் என்கிறது புராணம்! அந்தத் தேவர்களைவிட அல்லவா இங்குள்ள ஆண்கள் காமுகர்களாக, கடையர்களாக இருக்கிறார்கள்!......ஆட்களை அனுப்பி என்னைத் தூக்கிவரச் செய்து, கனகசேனன் சிறைவைத்தான். அந்தச் சிறையினின்றும் கபடமாக வெளிவரச் செய்து, தூமகேது இதோ அடைத்துவைத்திருக்கிறான்! இங்கிருந்து திரும்பவும் அபகரித்துச் செல்ல, கனகசேனன் மோப்பம் பிடித்துக்கொண்டு வந்துவிட்டிருக்கிறான்! அஞ்சலை என்றால், இவர்கள் என்னவென்றுதான் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்? என்னைப் பற்றி எவ்வளவு அலட்சியமான நினைப்பிருந்தால், இப்படியெல்லாம் துணிந்து செய்வார்கள்? ஆணவம் பிடித்த இவர்களுக்கு, நான் அறிவு புகட்டவேண்டாமா?"

இவ்வாறு சிந்தித்தவாறு இருந்த அஞ்சலையின் முன்பு, 'அம்மா!' என்று அழைத்துக்கொண்டே பணிப்பெண் மருதாயி வந்து நின்றாள்.

"எங்கே வந்தாய், மருதாயி?' என்று அஞ்சலை வெறுப்போடு கேட்டாள்.

"என்னம்மா சொல்றீங்கோ?" என்று காதில் கைவைத்து மருதாயி கேட்டாள்.

"உயிரோடு உன்னை வெட்டிக் கழுகுக்குப் போடவேண்டும் என்று சொல்கிறேன்!' என்று அஞ்சலை எரிச்சலோடு சொல்லிவிட்டு, தலையணை மீது கைவைத்துச் சாய்ந்து உட்கார்ந்தாள்.

'என்னம்மா கழுகா? இதற்கு முன்பு நீங்கள் பார்த்ததே கிடையாதா?' என்று சிரித்துக்கொண்டே மருதாயி கேட்டாள்.

'மருதாயி! நீ எங்கே வந்தாய்?'

அஞ்சலை குரலெடுத்துக் கத்தினாள்.

'நானா, அம்மா?'

'ஆமாம் பிணமே, ஆமாம்!'

'ஐயா வெளியே செல்கிறாராம்—நீங்களும்கூட வர்றீங்களா என்று கேட்கச் சொன்னார்!'

'ஐயா சுடுகாட்டிற்குச் செல்கிறாரா— செல்லச் சொல்!'

'செல்லச் சொல்வதா—அப்போ நீங்கக் கூடப் போகவில்லையா அம்மா?'

'அவனுக்குத்தான் வயதாயிற்று- சுடுகாட்டிற்குச் செல்கிறான்—நான் ஏண்டி கூடப் போகவேண்டும்?'

'கேட்கிறப்போலே சொல்லுங்கோ அம்மா'

"நான் வரவில்லை என்று போய்ச் சொல்!........கேட்டதா? இன்னும் கத்திச் சொல்லவேண்டுமா?"

"கேட்குது அம்மா — அப்போ ஐயாவோடு நீங்க வெளியே செல்லவில்லை!.....ஆசையா அவர் கூப்பிடறப்போ, நீங்க போயிட்டுத்தான் வாங்களேன் அம்மா!"

"செவிட்டு நாயே, அவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டாயா? ஆசையா கூப்பிட்டா, அவரோடு நீ போய்விட்டுவாயேன்!'

"நானா?"

"ஏண்டி இப்படிப் பார்க்கிறாய், அவர் வயதிற்கும் உன் வயதிற்கும் தாண்டி பொருத்தமாக இருக்கும்!'

"என்னம்மா சொல்றீங்கோ?"

"உன்னை வெளியே போகச் சொல்கிறேன்!"

"போகச் சொல்றீங்களா?"

"ஆமாம்! ஆமாம்!"

மருதாயி சிரித்துக்கொண்டே அந்த அறையைவிட்டு வெளியே சென்றாள்.

"மாலை நேரத்தில் கிழ மன்மத ராஜா வெளியில் உலாவச் செல்லும்

போது, பக்கத்தில் ஒரு ரதியும் இருக்கவேண்டுமாமே!'' என்று ஏளனத்தோடு சிரித்துக்கொண்டே, பலகணியின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

அந்த அறைக்கு அடுத்திருந்த திறந்த வெளியில் கிடந்த கனகசேனன் விடுத்த கணையும் அந்தக் கணையில் கட்டப்பட்டிருந்த ஓலையும் அவள் கண்ணில் பட்டன!

"அந்த ஓலையில் எழுதப்பட்டிருப்பது என்ன?''

அவள் இதயத்தில் ஒரு குரல் கேட்டது!

"அவன் என்ன எழுதியிருந்தால் உனக்கென்ன?''

முதல் குரலின் தலையில் குட்டியது, வேறொரு குரல்!

"இன்னும் அவர் மரத்தடியிலேயே நிற்கிறாரோ? உலாவச் செல்லும் அந்த மாமிசப் பிண்டத்தின் பார்வையில் அவர் பட்டுவிட்டால் —......''

அவள் கட்டிலை விட்டுக் கீழே குதித்து, வேகமாகத் திறந்த வெளியைக் கடந்து கைப்பிடிச் சுவரைப் பிடித்துக்கொண்டு கீழே எட்டிப் பார்த்தாள்.

அங்கே கனகசேனன் இல்லை! இங்கும் அங்கும் கண்களால் தேடிப் பார்த்தாள். எங்கும் அவனைக் காணோம். நீண்டதொரு பெருமூச்சுவிட்டாள். அப்பொழுதுதான் அவள் மனத்தில் ஒருவித ஆறுதல் தோன்றியது!

தூமகேது வெளியில் செல்வதைக் கண்டதும், 'அந்தக் கிழக் குரங்கு மேலே நிமிர்ந்து பார்த்தாலும் பார்க்கும் — அப்பொழுது அதன் பார்வையில் படக்கூடாது!'' என்ற எண்ணத்தோடு சிறிது பின்னால் தள்ளி நின்றாள்.

காலில் ஏதோ படுவதை உணர்ந்ததும், கீழே பார்த்தாள். கனகசேனன் எய்த அம்பு! அதில் கட்டப்பட்டிருந்த ஓலையை எடுத்துப் படிக்கக் குனிந்தாள்!

'வேண்டாம் அதைத்தொடாதே!'

அவள் இதயத்தில் ஒரு குரல், கோபத்தோடு கட்டளையிட்டது!

குனிந்தவள் நிமிர்ந்து நின்றாள். அவள் பார்வைக்கு நேராய், உயர வளர்ந்திருந்த ஒரு தென்னை மரமிருந்தது. அந்தத் தென்னை மரத்தின் கீற்றொன்றில் இரண்டு கிளிகள் அருகருகே உட்கார்ந்து ஆனந்தத்தோடு ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன! ஊஞ்சலாடும் அந்த இன்பக் கிளிகளைக் கண்டதும் இனந் தெரியாத ஒரு ஏமாற்றம். அவள் மனத்தில் தோன்றியது?

நெற்றியைத் தடவியபடி மெல்ல நடந்து சென்று கட்டிலின்மீது போய் உட்கார்ந்தாள். அந்தக் கிளிமொழியாளின் மனம் குழப்பமடையத் தொடங்கியது!

"அந்த ஓலையில் என்னதான் எழுதியிருக்கிறது என்று பார்ப்போமே'' என்று மீண்டும் கட்டிலை விட்டெழுந்தாள்.

அறையைக் கடந்து வெளியே வந்ததும் அந்த ஓலையை எடுத்துப் படிப்பது சரியா, முறையா என்ற தயக்கம் அவளுக்கு உண்டாயிற்று.

காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்த அந்த ஓலையைப் பார்த்தபடி சிறிதுநேரம் மௌனமாக நின்றிருந்தாள்.

ஒரு சாதாரண ஓலையைக் கண்டா இப்படி நான் கோழையாகி விடுவது? என்ற தைரியத்தோடு அம்பிலிருந்த ஓலையை அவிழ்த்தெடுத்தாள்.

கட்டிலில் போய் உட்கார்ந்து அந்த ஓலையிலிருந்த எழுத்துக்களைக் கண்களால் வாசித்தாள்.

அஞ்சலைக்கு,

நீ எங்கிருக்கிறாய் என்று தேடிக் கண்டுபிடிக்க நான் அடைந்த சிரமத்தைவிட இந்த ஓலையை எழுதுவதுதான் எனக்கு அதிக சிரமமாகத் தெரிகிறது! அந்தச் சிரமத்திற்குக் காரணம் என் உள்ளத்திலுள்ள வேதனையேயாகும்!

திருமேனியை நான் மணந்துகொள்ள இருக்கும் செய்தி உனக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். எனக்கு மனைவியாகப் போகும் திருமேனியை மயக்கி யாரோ ஒரு பௌத்த துறவி அழைத்துக்கொண்டு செல்கிறான் என்றும், அவர்கள் சேர நாட்டு எல்லையையும் தாண்டிவிட்டார்கள் என்றும், ஒரு சேவகன் வந்து சொன்னான். அதைக் கேட்டு மிகுந்த ஆத்திரமும் அச்சமும் அடைந்த நான் — உடனே ஓடிச் சென்று அந்தத் துறவியை அடித்துப் போட்டுவிட்டு, திருமேனியைத் தூக்கிக்கொண்டு வரும்படி, என் ஆட்களுக்குக் கட்டளையிட்டேன்!- உன்னைக் கண்ட பிறகுதான்—அந்தச் சேவகன் செய்த தவறு எனக்குத் தெரிந்தது! வேதனையடைந்தேன்! என் அவசரப் புத்தியை நினைத்து வெட்கமடைந்தேன்!

நீ பயந்து நடுங்கும்படிச் சிறிது நேரம் நடித்துவிட்டு, அதன் பிறகு நடந்ததை விளக்கிக் கூறி மன்னிக்கும்படி கேட்டு உன்னை உன் ஊருக்கு அனுப்பிவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தோடே, என்னுடைய விளையாட்டு மாளிகையில் உன்னை வைத்திருந்தேன்.

"திருமேனி சொன்னாள்—கனகசேனன் ஒரு பைத்தியம்'' அதிலும் முழுப் பைத்தியம் என்று?'' இவ்வாறு நீ சொன்னாயே, அது நினைவிருக்கிறதா?

அதைக் கேட்டு "இப்பொழுது அஞ்சலையை வெளியே அனுப்பினால், நடந்ததைத் திருமேனியிடம் கூறிவிடுவாள்! அதன் பிறகு அவள் என்னைத் திருமணமே செய்துகொள்ளமாட்டாள்! ஆகவே திருமணம் நடைபெறும் வரை, இவளை இங்கேயே அடைத்து வைத்திருக்க வேண்டும்!'' என்று தீர்மானித்தேன்;

உன்னையாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று தோழிகள் சொல்லக்கேட்டதும், நான் எவ்வளவு வேதனை அடைந்தேன் தெரியுமா அஞ்சலை? நாம் செய்த முட்டாள்தனத்தால், ஒரு பெண்ணின் வாழ்வே பாழாகிவிட்டதே என்று கண் கலங்கினேன்! அஞ்சலையை எப்படியும் கண்டுபிடித்து, சொந்த ஊரில் அவளைக் கொண்டு போய் விட்டுவிடவேண்டும் என்ற முடிவோடு, நீ காணாமல் போன மறுநாளே ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டேன்! நேற்றுதான் மாடியில் நின்றிருந்த உன்னைக் கண்டேன்! அங்கும் இங்கும் விசாரித்ததில், உன்னைத்தூமகேது சிறைவைத்திருப்பதாகஅறிந்தேன்! இன்று இந்த ஓலை அனுப்புகிறேன் -என்னை மன்னித்துவிடு அஞ்சலை! நீ அஞ்சாதே! தூமகேதுவின் கொடுமையினின்றும் உன்னை நான் காப்பாற்றுகிறேன்! நீ இருக்கும் மாளிகைக்கு வடக்கே அரைகல் தூரத்தில் ஒரு தாமரைத் தடாகமிருக்கிறது! இரவு நேரத்தில் எப்படியாவது அங்கு வந்துவிடு! குதிரையோடு நான் தயாராக இருக்கிறேன்.

புத்தபிரான்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்—எந்தவிதமான கெட்ட எண்ணத்தோடும், இதை நான் எழுதவில்லை! என்னை நீ நம்ப வேண்டும், அஞ்சலை! உனக்காக அந்தக் குளக்கரைமீது, எத்தனை இரவுகளானாலும் காத்திருப்பேன்! கவலைகொள்ளாதே! தைரியத்தைக் கைவிடாதே!

அன்புள்ள
கனகசேனன்.

இந்த ஓலையைப் படித்து முடித்ததும், அஞ்சலையின் மனத்தில் ஓர் இன்பம் தோன்றியது! கனகசேனன்மீது ஒரு நம்பிக்கை பிறந்

தது! தூமகேதுவின் சிறையினின்றும் தப்பிச்செல்ல நல்ல மார்க்கம் கிடைத்துவிட்டது என்றெண்ணி மகிழ்ச்சி அடைந்தாள்!

அந்த மகிழ்ச்சியோடே கட்டிலில் சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டாள்.

"கடமை வீரர்தான் நீங்கள், ஆனால் இந்த கன்னியின் உள்ளத்தைக் களவாடிக்கொண்ட கள்வருமாவீர்."

"ஓகோ, கள்வனுக்குத் தண்டனை கிடையாதோ?"

"ஏன் கிடையாது? உம்மைக் கட்டப்போகிறேன்!"

"கயிற்றாலா?"

"ஆமாம், திருமணம் என்ற கயிற்றால்!......உம்மைத் தள்ளப் போகிறேன்......"

"சிறைக்கோட்டத்திலா?"

"அல்ல குமரிக்கோட்டத்தில்!"

தூமகேதுக்குப் பயந்து முன்பு மயக்கமடைந்தபோது அந்த மயக்கச் சுழலில், தனக்கும் கனகசேனனுக்கும் நடந்த இந்தக் காதல் பேச்சு—அஞ்சலையின் நினைவிற்கு வந்தது.

"இதென்ன சித்தப்பிரமை?" என்று தனக்குத்தானே பயத்தோடு சொல்லிக்கொண்டே கண்களைத் திறந்தாள்.

திறந்த அவள் கண்களில், 'திருமேனியை நான் மணந்துகொள்ள இருக்கும் செய்தி, உனக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்!' என்ற ஓலையிலிருந்த வரிகள் பட்டபிறகுதான், அஞ்சலையின் மனம் ஆறுதலடைந்தது.

அன்றிரவு தூமகேதுவைப் பார்க்க அஞ்சலையே அவன் அறைக்குச் சென்றாள்.

"வா அஞ்சலை, வா! இப்படி உட்கார்!" என்று மலர்ந்த முகத்தோடு சொல்லிக்கொண்டே எழுதிக்கொண்டிருந்த ஓலையை அப்படியே வைத்துவிட்டு எழுந்து நின்றான் தூமகேது!

"ஏதோ முக்கியமான ஓலை எழுதிக்கொண்டிருந்தபோது நான் வந்துவிட்டேன்! மன்னிக்கவும்! நான் வருகிறேன்!"

"நில் அஞ்சலை! ஓலைக்கென்ன அவசரம்—அது கிடக்கட்டும்! வா, இப்படி உட்கார்......"

"பரவாயில்லை! பால்போல் நிலவு காய்கிறதே, தோட்டத்தில் சிறிது நேரம் உலவிவிட்டு வரலாமே என்று உப்பரிகையைவிட்டுக் கீழே இறங்கிவந்தேன்! தங்கள் அறையில் விளக்கு எரிந்துகொண்டிருக்கவே இப்படி......"

பேச்சை நிறுத்திவிட்டுப் புன்னகையோடு அவனை பார்த்தாள்.

அந்தப் புன்னகையைக் கண்டதும் அவனது தூண் போன்ற கால்கள் குதிக்க ஆரம்பித்துவிட்டன. அவன் எந்தப் புன்னகைக்காகத் தவங்கிடந்தானோ—அந்தப் புன்னகை இவ்வளவு எளிதல் கிடைப்பதென்றால் — அவன் உள்ளம்கொண்ட ஆனந்தத்தைச் சொல்லவும் வேண்டுமா?

"தோட்டத்தில்தானே......பால் நிலவில்தானே......" மிதமிஞ்சிய பூரிப்பால் பேசமுடியாமல் அவன் தணறினான்.

"தாங்களும் வருகிறீர்களா?" என்று குயில் குரலில் அவள் கேட்டாள்.

"பாக்கியம்...பாக்கியம் செய்தவன் நான், அஞ்சலை!" அவன் நாக்குழறியது.

"நீங்களும் உடன்வருவதானால், தோட்டத்திற்கு எதற்கு — வெளியில் சிறிது தூரம் பேசிக்கொண்டு போய்விட்டு வரலாமே?"

"கனவில்லையேஇது, அஞ்சலை?"

"சிறிது தூரத்தில் ஒரு தாமரைத் தடாகமிருக்கிறதாமே — அடிக்கடி மருதாயி கூறுவாள்!"

"இந்த நிலவு வெளிச்சத்தில், அதன் கரைமீது உட்கார்ந்து பேசினால்......"

"மிகுந்த மகிழ்ச்சியாக இருக்குமென்றுதான் தங்களையும் உடனழைக்கிறேன்?"

"பாக்கியம் செய்தவன் நான்! புறப்படு, அஞ்சலை! இந்தமாளிகையினுள் இனி ஒரு நொடியும் என்னால் இருக்கமுடியாது!"

அந்தத் தாமரைத் தடாகத்தின் கரைமீது இருவரும்போய் உட்கார்ந்தனர்.

"அல்லி மலர்கள் பூத்திருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது, பார்த்தீர்களா?"

"அழகு! அந்த அழகு உன்முகத்தைத் தவிர வேறெங்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை அஞ்சலை!"

"அப்படியா? இருங்கள், ஒரு அல்லி மலரைப் பறித்துக்கொண்டு வருகிறேன்!"

"நீ இங்கே உட்கார்ந்திரு அஞ்சலை நான் போய் பறித்துக்கொண்டு வருகிறேன்!' என்று சொல்லிவிட்டு, தூமகேது குளத்தினுள் இறங்கினான்.

அஞ்சலை எழுந்து நின்று இப்படியும் அப்படியும் பார்த்தாள். பக்கத்திருந்த ஒரு மரத்தின் மறைவிலிருந்து கனகசேனன் வெளியே வந்து அஞ்சலை' என்றான் மெல்லிய குரலில்!

"புறப்படுங்கள்!" என்று அவனை அவள் அவசரப்படுத்தினாள்.



குதிரையின்மீது அஞ்சலையும் கனகசேனனும் பாய்ந்து ஏறினர் அந்தக் குதிரை காற்று வேகத்தில் பறந்தது.

காட்டினுள் நுழைந்து சென்றபோது, குதிரையின் கால் ஒன்று ஒரு சுருக்குக் கயிற்றில் சிக்கிக்கொண்டது? குதிரையோடு, அஞ்சலையும் கனகசேனனும்தரையில் சாய்ந்தனர்.

"ஆ! ஆ!" என்றசிரிப்பொலியைக் கேட்டதும், கனகசேனன் ஆத்திரத்தோடு எழுந்தான்.

புதருக்கு அருகிலிருந்து ஒருவன் நிலவின் வெளிச்சத்திற்கு வந்தான். அவன் மீது கனகசேனன் பாய்ந்தான். இருவருக்கு மிடையே கடும் போர் நிகழ்ந்தது.

இரண்டு புலிகள் ஒன்றின் மீது ஒன்று பாய்ந்து சண்டையிடும் போது, பதுங்கி நின்று பாக்கும் மானைப்போல — அவர்களின் போரை, நடுங்கும் உள்ளத்தோடு பார்த்தபடி நின்றிருந்தாள்.

கனகசேனன் வேகமாகத் தன் உடைவாளை உருவுதற்கும் — மற்றொருவன் யார் என்பதை அஞ்சலை தெரிந்து கொள்வதற்கும் — சரியாக இருந்தது!

(வளரும்)

12-ம் பக்கத் தொடர்ச்சி

ணங்கள், இன்ப நினைவு அலைகள் உள்ளத்துளெழுந்தன. அப்போதைய நண்பன் ராமகிருஷ்ணன், இப்போது பம்பாய் நகரத்தில் அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளான். அவன் தன் உறவினள் ஒருத்தியை அழைத்து வந்து, இவளை வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொள், என்று சொல்லி, அன்று அவன் பேசிய கருத்துக்கள் நினைவில் வந்தன.

"ஒருவனும் ஒருத்தியுமே சேர்ந்து வாழ்க்கை நடத்துதல் வேண்டும் என்பதற்கு, மதமும், பாவபுண்ணியங்களும் காரணமாகப் பேசப்படுகின்றன. அவை சொல்லும் மூடக் கருத்துக்களை நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் குடும்பத்தில் சமத்துவம் நிலவ ஒருவனும் ஒருத்தியும் என்ற நிலை இருப்பின்தான் இயலும் என்று கூறி தத்துவ மேதை, பெர்ட்ரண்டு ரஸ்ஸல், எழுதிய ஏடொன்றையும் தந்திட்டான். தற்காத்து, தற்கொண்டான் பேணி தகைசான்ற சொற்காத்து, சோர்விலாள் பெண் என்பதற்கு இலக்கணமாக உள்ள மங்கை நல்லாளை தன் வாழ்க்கைத் துணையாக்கிய திருராமகிருஷ்ணனை, சந்திரசேகரன மனமார வாழ்த்தினான்.

ஆனால் அவள்தான், குமார் தேடுகின்ற பெண்ணோ என எண்ணிய போது, கொதிக்கும் நீர் அவன் மேல் கொட்டியதுபோல் துடித்தான்.

தான் வந்த இரயிலிலேயே தன்னுயிர்க்கு உயிரான மங்கை நல்லாளும் வந்தனளோ என்றும் எண்ணினான்.

காடுமலைகளைக் கடந்து செல்லும் எருமைபோல், இரயிலும் சந்திரசேகரன் இறங்கவேணடிய ஊர் வந்தடைந்தது, இறங்கினான்.

பெட்டிபடுக்கைகளை இரயில்நிலயத்தில் ஒப்படைத்தான். வீடு நோக்கி வேகமாக நடந்தான்; ஓடினான். வீட்டிலே அவன் எண்ணியதும், எண்ணாததும் நடந்துகொண்டிருந்தது. ஆடவனொருவன் தன் மனைவியோடு ஆத்திரம் பொங்க பேசுவது அவன் காதில் விழுந்தது. ஆம்! பழிவாங்கத் துடித்த குமார், அவன் மனைவியின் உயிர் பறித்திட, உயிரினும் ஓங்கிய மானம்பறித்திட எண்ணிப் பேசுவது அவன் காதில் விழுந்தது.

தாளிட்டிருந்த கதவுகளை பலம் கொண்ட மட்டும் தட்டினான். அதைத் திறந்திட முயலும் மங்கையினை குடிகேடன் தடுக்கிறான் போலும்! சில விநாடிகளில் கதவுகள் வேகமாகத் திறந்தன. திறந்த கதவுகளின் வழியே, காலடியில் அவன் மனைவி வீழ்ந்திட்டாள்.

புதியவன் வரவுகண்டு, ஆம், ரயிலில் பிரயாணம் செய்த அதே இளைஞன் குமார், திடுக்கிட்டான்.

'அத்தான்' என்றிட்ட அருமை மனைவியை அன்புடன் தூக்கி அணைத்துக்கொண்டான்.

இரயிலில் சந்தித்தவனே, தான் பழிவாங்கத் துடித்த பெண்ணின் கணவனாக இருப்பது கண்டு அவன் பேதளித்தான்.

மருண்ட அவள் கண்கள் சந்திரசேகரன் என்ன எண்ணுகிறான் என்பதைத் துழாவிக்கொண்டிருந்தன.

"என்ன குமார்! உன்னைப்போல் உன்மத்தனாக, அறிவு கேட்ட பேதையாக நான் இல்லை என்பதைத் தெரிந்துகொள்" என்று கூறி "பழிவாங்கும் படலம் முடிந்துவிட்டதா? உன் வெறி தணிந்துவிட்டதா? இன்னும் தெளியாமல் நிற்கிறாயா?" என்று சந்திரசேகரன் கேட்டான். குமார் குழப்பத்தின் உச்சியில் குடும்பத் தலைவனுக்கெதிரே நின்றுகொண்டிருந்தான். அவன் பேசவில்லையே தவிர அவன் எதையும் எந்த விநாடியும் செய்வான்போல் தெரிந்தது! சந்திரசேகரன் தெளிவோடு சொன்னான். "இவள் உன்னை விரும்புகிறாள் என்பதை நீ நிரூபிக்க முடியுமானால், உன்னோடு நானே இவளை அனுப்பிவைக்கிறேன்!"

குமாரின் இதயத்தில் ஈட்டிகொண்டு தாக்குவதுபோல இருந்தது.

கற்சிலைபோல் நின்ற குமார், கீழே வீழ்ந்தான். கதறி அழுதான். தன்னை மன்னித்துவிட வேண்டுமெனக் கெஞ்சினான்.

படர்ந்த பனி விலகும்போது பொருள்களெல்லாம் பளிச்சென்று தெரிவதுபோல், அவனது பேதைமை நீங்கப்பெற்றதும், அவன் உலகத்தை உணர்ந்தான். குனிந்த தலையுடன் வீட்டைவிட்டு அகன்றான்.

குளிர்மிகுந்த அந்த நாளில் உதகமண்டலத்திற்கு ரயில் ஏறினான். கடுமையான குளிர் அவனது மனதை நிதானத்திற்குக் கொண்டு வந்துகொண்டிருந்தது. பல வாரங்கள் கடந்தன. தன் வாழ்வில் ஒளியேற்றும் விளக்கொன்று உண்டு என்று உணர்ந்தான்.

வெறிச்சென்று காணப்பட்ட உலகில் நம்பிக்கை ஒளிகாண வேகமாகத் தன்னூர் திரும்பினான்.

இரயில்நிலயத்தை அடைந்ததும் ஏதோ ஓர் பதைபதைப்பு—ஏதோ ஒன்று நடந்துவிடக்கூடாது என்ற துடிதுடிப்பு-இத்தகையஉணர்ச்சிக் கொந்தளிப்புடன் வாடகைக் கார் ஒன்றில் அமர்ந்து தன்னை கடிமணம் புரிந்திடுக என்று மன்றாடிய மங்கை நல்லாள் இல்லம் நோக்கிச் சென்றிட்டான். நிறுத்து என்ற குரல் கேட்டதும், டிரைவர் டாக்சியை நிறுத்தினான்.

அத்தெரு முனையில், டாக்சியை நிறுத்தியதற்கும் காரணமிருந்தது. மங்கள இசை, நாதசுவர நாதம் காற்றில் மிதந்து வந்தது! அப்படியும் இப்படியும் ஆடி அலைந்த அவன் மனம் ஓய்ந்துவிட்டது. இறங்கிவிட்ட குமார் தள்ளாடித் தள்ளாடி நடந்தான். நெடிதுறக்கம்கொண்டிருக்கக்கூடாதோ என எண்ணினான்.

எது நடைபெறக்கூடாது என்று எண்ணினானோ அது நடந்து முடிந்துவிட்டது. அவன் உள்ளத்தினைப்பெற தவமிருந்தவள்இன்று மங்கள இசையினூடே மணக்கோலம் பூண்டுவிட்டாள்.

வெறுத்துப் பேசி வெறிக்கூச்சலிட்ட அவன் மனம் இப்போது குமுறி அழுதது. நாதசுர இசை நின்றது. வாழ்த்தொலிகள் முழங்கின. அறிவுரைகள் வாழ்த்துரைகளோடு கலந்தன. பெரியவர் ஒருவர் வாழ்க்கை வழிபற்றி விளக்கினார். அவர் சொன்ன ஒரு குறள் தெளிவாகக் கேட்டது:

ஒருபொழுதும் வாழ்வ தறியார்கருதும்
கோடியு மல்ல பல.

❋

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி.என். அண்ணாதுரை.